தரமானதே சிறந்தது என்றால்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

When only The best is Good Enough

Buy
Solide Pumps

சுடர் 5: பிரமோதூத ஆண்டு சித்திரை மீ 31 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 18 (14-05 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 85

ஜனாதிபதியின் பணிப்பை அடுத்து லண்டனிலிருந்து

# ஹமீத் இன்று நாடு திரும்புவார்

# உடன் வடக்கே வர ஏற்பாடு!

## இரண்டொரு நாட்களில் புலிகளுடன் பேச்சு

கொழும்பு, மே 14

உடனடியாக நாடு திரும்பி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துமாறு ஜனாதிபதி திரு. பிரேமதாஸா விடுத்திருக்கும் உத்தரவை அடுத்து நீதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸி எஸ். ஹமீத் லண்டனிலிருந்து இன்று நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு திரும்பிய கையோடு யாழ்ப்பாணம் வருவதற்கு அமைச்சர் ஹமீத் திட்டமிட்டிருப்பதாகவும் கொழும்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைச்சர் விடுதலைப் புலிகளின் உயர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

வடக்கு-கிழக்கில் தற்போது எழுந்துள்ள அரசியல் சூன்ய நிலை உடனடியாக நீக்கப்பட வேண்டும் என இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகள் வலியுறுத்துவர் எனத் தெரிவிக்கப்பட்டது

இந்தப் பேச்சுக்களின் போது புலிகள் தரப்பில் கடுமையான போக்கு கையாளப்படக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இம்மாத இறுதியுடன் செயல் இழந்து போகும் வடக்கு - கிழக்கு மாகாண சபை, அதற்குப் புதிய தேர்தல் நடத்துதல், அரசமைப்புக்கான ஆறாவது திருத்தத்தை நீக்குதல், ஏனைய சில தமிழ் குழுக்களுக்கு கொழும்பில் புகலிடம் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் ஆகியவை உட்பட முக்கிய விடயங்கள் இந்தப் பேச்சுக்களில் ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## யாழ். மாநகரசபைக்கான யுனிசெப் உதவி குறைப்பு

யாழ்ப்பாணம், மே 14

"யாழ். மாநகரசபைப் பிரதேசத்துக்கு யுனிசெப் உதவிகள் அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளன. கடந்த தடவை 40 கோடி ரூபா வழங்கப்பட்டது. இத்தடவை 20 கோடி ரூபாவே வழங்கப்படும்"

யாழ் விஜயம் மேற்கொண்ட யுனிசெப் அதிகாரி ஜனாப் ஹமீட் நாவலர் மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

"யாழ். மாநரசபைப் பகுதியில கடந்த ஐந்து வருடங்களாக எமது அமைப்பால் மேக்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி அடைந்துள்ளன. கடந்த ஐந்து வருடங்களில் 40 கோடி ரூபா செலவிடப்பட்டது.

அடுத்த ஐந்து வருடங்களுக்கு அதே அளவு உதவி வழங்க முடியாதுள்ளது. காரணம் இம்முறை நாடெங்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மடகஸ்காரில் திடீர்புரட்சி! முறியடிப்பு என அறிவிப்பு

இந்துமகாசமுத்திரத்தில் உள்ள தீவான மடகாஸ்காரில் மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டதாக அரசு வானொலி நேற்று அறிவித்தது.

நாடு, ஜனாதிபதி ரிக்கரோவின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

1975 முதல் இவர் ஜனாதிபதியாக இருந்துவருகின்றார்.

ஜனாதிபதி ரிக்காரோவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதாக நேற்று அரசு வானொலி அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து வானொலிக் கட்டடத்தை அரசுப்படையினர் சுற்றி வளைத்துக்கொண்டனர். ஏராளமான மக்களும் வானொலி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

சில மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தின் ஒருபிரிவு சதி முயற்சி ஒன்றை மேற்கொண்டது. அது சிலமணித்தியாலங்களில் முறியடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உலகின் நான்காவது பெரிய தீவு மடகாஸ்கார் ஆகும்.

ஆபிரிக்காவின் கரையோரத்தில் இருந்து 25மைல் தொலைவில் இத்தீவு இருக்கிறது. (ஒ-எ)

## ஜே.வி.பி. ஆதரவு மாணவர்கள் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில்!

ஹோமகம பகுதியில் தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் பத்து பாடசாலை மாணவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டிருப்பாதக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தாக்கப்பட்டு படுகாயங்களுக்கு இலக்கான ஐந்து மாணவர்கள் ஹோமகம ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கொழும்பு பொலீஸ் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்த போது இது குறித்து முழு அளவில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-2)

சொந்த இடங்களுக்கு

## 200 ஆசிரியர்களுக்கு விரைவில் இடமாற்றம்

யாழ்ப்பாணம். மே 14

வெளிமாவட்டத்தில் ஐந்து ஆண்டுகள் கடமையாற்றிய 200 ஆசிரியர்கள் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை இடமாற்ற சபையின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்ற சபையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர், வடமாகாண ஆசிரியர் சங்கச் செயலாளர், தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவிலான ஆசிரியர் காங்கிரஸ், ஜாதிக சேவா சங்கமய, இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கிறார்கள்.

வெளி மாவட்டங்களில் 5 ஆண்டு சேவையாற்றிய ஆசிரியர்களில் இடமாற்றம் கோரி விண்ணப்பித்தவர்களின் விண்ணபபங்கள் முதல் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

இவர்களது இடமாற்றங்கள் பற்றி கல்விப்பணிப்பாளர்கள் மட்டத்திலும் ஆராயப்பட்டு அதன்பின்னர் பெயர் விவரங்கள் அறிவிக்கப்படும்.

இத்தகவலை வடமாகாண ஆசிரியர் சங்க செயலாளர் திரு. வே. சிவராசா தெரிவித்தார். (ஒ-3)

## 6வது திருத்தத்தை நீக்கினால் தான் நாட்டில் சமாதானம் ஏற்படும்!

### தம்பலகமத்தில் யோகி

தம்பலகமம், மே 14

அரசமைப்புக்கான ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ அல்லது வேறு தென்னிலங்கைக் கட்சிகளோ எதிர்ப்புத் தெரிவிப்பார்களானால் அவர்கள் நாட்டில் சமாதானம் நிலவுவதை விரும்பவில்லை என்பதே அர்த்தம்.

நாட்டில் சமாதானமும், அமைதியும் நிலைக்கவேண்டுமெனில் ஆறாவது சட்டத் திருத்தம் நீக்கப்பட்டே ஆக வேண்டும். இதனையே நாம் அரசாங்கத்துடன் நடக்கும் பேச்சு வார்த்தைகளின்போது வலியுறுத்திவருகிறோம்,

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி.

தம்பலகமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேனிசை செல்லப்பாவின் புரட்சிகீத நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக திரு யோகி இங்கு வந்திருந்தார். அப்போது செய்தியாளர்களுடன் கலந்துரையாடுகையிலேயே முன்கண்டவாறு கூறினார்.

திரு. யோகி செய்தியாளர்களின் கேள்விகளுக்குத் தெரிவித்த ஏனைய கருத்துக்கள்'

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சு வார்த்தையை ஈ.பி.ஆர்.எல்.எவ். குழப்பமாட்டாது!

### யோகசங்கரி கூறுகிறார்

கொழும்பு, மே 14

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கிலும் இருக்கிறார்கள். காடுகளிலும் இருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் தற்போதுள்ள அமைதியைக் குலைக்க மாட்டார்கள். அரசு - புலிகள் பேச்சுக்களையும் அவர்கள் குழப்பமாட்டார்கள்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான திரு. கே. யோகசங்கரி.

கொழும்பிலிருந்து வெளிவரும் "சண்டே ஐலண்ட்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அந்தப் பேட்டியின் சிலமுக்கிய பகுதிகள் வருமாறு :-

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் படை வெளியேற்றம் குறித்து ஜே.வி.பி. அறிக்கை

கொழும்பு, மே, 14

இலங்கையில் இருந்து இந்திய துருப்புக்கள் விலக்கப்பட்டதை வரவேற்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அறிக்கை விடுத்துள்ளது.

முன்னணியின் சார்பில் அதன் பதில் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கா கையெழுத்திட்ட அறிக்கை கொழும்புப் பத்திரிகைகளுக்கு தபால் மூலம் கிடைத்தது:

இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து ஜே.வி.பியும் மற்றும் அமைப்புக்களும் ஆரம்பித்த இயக்கத்தைத் தொடர்ந்து இந்தியா புத்திசாலித்தனமாக தூரதிருஷ்டியுடன் தனது துருப்புக்களை விலக்கிக்கொண்டது.

தொடர்ச்சியாக பதவிக்கு வந்த அரசுகள் தமிழர்களை இரண்டாந்தர பிரஜைகளாக நடத்திவந்தன. அந்த அரசுகளின் இனவாத, பிரிவினை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்கிளாய் முகாம் பலப்படுத்தப்படுகிறது

யாழ்ப்பாணம், மே 14

கொக்கிளாயில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கொக்கிளாய்ப் பகுதியில் இரண்டு ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் தற்போது இயங்கி வருகின்றன.

அவற்றில் ஒன்று பாடசாலைக் கட்டிடத்தில் இயங்கிவருகிறது. அந்த முகாமை மூடுவதற்கு ஒப்புக்கொண்டபடி அதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் மற்றைய முகாம் பலப்படுத்தப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## இராணுவமுகாம் உள்ளதால் மீளக்குடியமரத் தயக்கம்

யாழ்ப்பாணம், மே 14

கொக்கிளாய் நாயாறு பகுதிகளில்இருந்து குடிபெயர்ந்த ஆயிரத்து 425 தமிழ்க் குடும்பங்களில் 763 குடும்பங்களே மீளக் குடியேறியுள்ளன.

கொக்கிளாய்ப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் உள்ளதால் அப்பகுதியைச் சேர்ந்த 662 குடும்பங்கள் மீளக் குடியேறத் தயக்கம் காட்டி வருவதாகத் தெரிய வருகிறது

கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் கொக்கிளாய், நயாறு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த ஆயிரத்து 425 குடும்பங்களில் 763 குடும்பங்கள் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணிஆகிய பகுதிகளில் நிரந்தரமாகக் குடியேறியுள்ளனர்.

அதே நேரம் கொக்கிளாய் பகுதியில் இரண்டு ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் இருப்பதால அப்பகுதியில் மீளக் குடியேற வேண்டிய 662 குடும்பங்களும் அங்கு சென்று குடியேற அச்சம் தெரிவிக்கின்றனவாம்.

சம்பந்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பகல் நேரங்களில் அவ்விடங்களுக்கு சென்று திரும்பி விடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ 3)

## அமைதிப் படையின் பணியை குறை கூறுவது சரியல்ல

### பிரதமர் சிங் இப்படிச் சொல்கிறார்

புதுடில்லி, மே 14

இலங்கையில் இந்திய அமைதிப் படையினர் ஆற்றிய பணியைக் குறைகூறுவது சரியல்ல.

இப்படி பிரதமர் வி. பி சிங் தெரிவித்தார்.

ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு புதுடில்லி திரும்பிக்கொண்டிருந்தபோது திரு. சிங் விமானத்தில் வைத்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அமைதிப்படை மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்திய அரசின் உத்தரவின் படி எடுக்கப்பட்டவை.

நமது புலனாய்வு அமைப்புகள் குறித்து பகிரங்கமாக குற்றங்கள் கூறுவதும் முறையல்ல- என்றும் திரு. வி பி சிங் தெரிவித்தார். (ஒ-எ)

### முச்சந்தி முரளி



கொக்கிளாய் சனத்துக்கு எப்ப விமோசனம் கிடைக்குமோ......?

### சாரண ஆணையாளர் விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம் மே 14

யாழ். மாவட்ட சாரண ஆணையாளரும், செஞ்சிலுவைச் சங்கத்தின் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பிரதிநிதியுமான திரு. எஸ் வரதலிங்கம் [வயது 55] விபத்து ஒன்றில் சிக்கிமரணமானார்.

### சுபநேரம்

14 05 1990

திங்கட்கிழமை சித்திரை 31

சுபநேரம்

11-53 முதல் 01 23 வரை

இராகு காலம்

07-23 முதல் 08 53 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## தமிழ், முஸ்லிம் தொழிலாளர் ஒரே அணியில் திரள வேண்டும்

### புலிகள் பிரமுகர் அழைப்பு

தர்மபுரம். மே 14

தமிழீழப் பகுதியிலுள்ள அனைத்து தமிழ், முஸ்லீம் தொழிலாளர்களும் எமது தலைமையின் கீழ்-ஒரே அணியின் கீழ் திரள வேண்டும்.

நேற்று முன்தினம் தர்மபுரத்தில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் தமிழீழ தொழிற் சங்கங்களுக்கான கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போது முன்னணியின் பிரதம அமைப்பாளர் திரு. பரமு-மூர்த்தி மேற்கண்ட அழைப்பை விடுத்தார்.

தமிழீழத்தைச் சேர்ந்த அனைத்து மாவட்டப் பிரதிநிதிகளும் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த தொழிற் சங்கப் பிரதிநிதிகளான திருவாளர்கள் வில்லியஸ், கதிரேசு ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் திரு. மூர்த்தி மேலும் கூறியதாவது:-

தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேருவதன் மூலமே எமது இலட்சியத்தை நோக்கி விரைவாகச் செல்ல

(5 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259; காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3451)

பதிவு செய்யப்படாத நல்ல நிலையிலுள்ள Honda, Super Cub 50, Chaly மோட்டார் சைக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கனகேஸ்வரன் ஆசிரியர்' மே/பா சிவசுப்பிரமணியம், ஆசிரியர் விசவெட்டி, அளவெட்டி தெற்கு. [13069]

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி பனையாலையில 15 பரப்பு மேட்டு நிலக் காணி விற்பனைக்கு உண்டு. வீடு, தொழிற்சாலை, பண்ணை அமைப்பதற்கு உகந்த இடம். பிரித்தும் கொடுக்கப்படும். நீர்வேலிச் சந்தியில் இருந்து சுமார் 100 யார் தூரம் கிழக்கே. தொடர்பு:பரமசாமி,நீர்வேலி மத்தி, நீர்வேலி. (3462)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

ஒரு மாத Hyline வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 15-05-90 புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். (3449)

**வீடு விற்பனைக்கு**

உரும்பிராய் சந்திக்கு அருகில் 3 பரப்பு காணியில் கிணறு குளியலறை உட்பட சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன்விற்பனைக்குண்டு தொடர்பு;- எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரியூட். இருபாலைச் சந்தி. (3459)

**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம் சம்பஸ் பெண்கள் விடுதிக்கு முன்பாக உள்ள கடை சகல தளபாடங்களுடன் வாடகைக்கு விடப்படும்.தொடர்பு; 144, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (3457)

**தேவை**

தையல் வேலைக்கு நன்றாக வெட்டித் தைக்கக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை. இல. 694, C/o உதயன். (3461)

கற்பூரத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. முன் அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. ஜெற் இன்டஸ்றீஸ், [கற்பகம் பிள்ளையார் கோவிலடி) விதானையார்வீதி, கோப்பாய்தெற்கு. (3460)

யாழ்நகரில் புதிதாக இயங்க இருக்கும் ரவல் ஏஜென்சிக்கு பெண் லிகிதர்கள் உடன் தேவை. சம்பளம் போன்ற விபரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். Lakshmi. 65A, 4th Cross Street, Jaffna. (மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும்) (3463)

**A/L CHEMISTRY**

பல் தெரிவு வினாக்கள் மூலம் பொது இரசாயனம் பௌதீக இரசாயனமும் (G.C.E. A/L வகுப்புகளுக்குரியது) by ம. செல்வரத்தினம் B Sc இராஜேஸ்வரி மகேஸ்வரன் A/L Chemistry பரீட்சைக்குரிய மிக முக்கிய தகவல்களை உள்ளடக்கியது. விலை ரூபா 75/- வெளியிடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-4493)

**மணமகள் தேவை**

கனடாவில் நிரந்தரமாக வசிப்பவரும், வியாபாரத்துச் செய்தவருமான வேளாள கத்தோலிக்க சமூகத்தைச் சேர்ந்தவருமான இரு பிள்ளையின் தந்தையுமான 42 வயதுடைய ஒருவருக்கு கல்யாணமாகாத அல்லது விதவையான ஏறக்குறைய 35 வயதுடைய கத்தோலிக்க அல்லது இந்து வேளாண் குல மணமகள் தேவை. கனடா செல்ல வேண்டும். விபரங்களுடன் 22-05-90க்கு முன்பாக விண்ணப்பிக்கவும். C/o உதயன் 123. [13082]

---

## 1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திருமதி சின்னையா இராசம்மா**

தோற்றம் 4 - 10 - 1906 — மறைவு 25 - 4 - 1989

திதி: 14 - 05 - 90

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காக இருந்து எம்மை அன்புடன் ஆதரித்து உலகினிலே ஒளி பெறச் செய்து, எம்மையெல்லாம் நீங்காத துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி பெற மாத்தனைமுருகனை பிரார்த்திக்கிறோம்.

சாம்பியன்லேன், கொக்குவில்,

சகோதரர்கள், பெறாமக்கள் மருமக்கள். பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

(13081)

---

## உபநயன அழைப்பிதழ்

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான பிரமோதூத வருடம் வைகாசி மாதம் 2 ஆம் திகதி (16-05-90) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில்

எமது கனிஸ்ட புத்திரன்
சிரஞ்சீவி

**விக்ன ராஜனுக்கு**

உபநயனமும் பிரும்மோபதேசமும் செய்வதாக ஸ்ரீ கைலாச விநாயகரினதும், ஸ்ரீ கமலாம்பிகை சமேத கைலாசநாத பெருமானினதும், நல்லைக் கந்தனினதும் திருவருளை முன்வைத்து மேற்படி முகூர்த்தம் நடைபெறவிருப்பதால் அத் தருணம் உற்றார், உறவினர் நண்பர்கள் சமுகமளித்து குழந்தையை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்

சு. பசுபதிஸ்வரசர்மா ப. சகுந்தலாதேவி
[நல்லூர் கந்தசுவாமி கோவில்]

179, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (13067)

---

## நெடுந்தீவுக்கு மின்சாரம்

நெடுந்தீவு மின்சார விநியோகத்துக்கென முன்பு மதிப்பீடுசெய்யப்பட்ட தொகையான 25 லட்ச ரூபா மேலும் 10 லட்சம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய, கிழக்கு, மேற்குப் பகுதிகளை அடக்கிய முழுத் தீவுக்கும் மின்சாரசபையால் மின்விநியோகம் செய்ய சபை முயல்வதாக விசேட ஆணையாளர் திரு எஸ். இராசதுரை தெரிவித்தார்.

இது குறித்துதான் ஜனாதிபதி, மின்சக்தி அமைச்சர் ஆகியோருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும், ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும் எனவும் திரு இராசதுரை மேலும் தகவலளித்தார். (ப-11)

---

## ஆங்கில வகுப்புகள்

**ஆண்டு IV தொடக்கம் XIII வரைக்கும்**

Spoken English with grammer
Advanced English.
By
Experienced Teacher (London Graduates)

அனுபவமுள்ள ஆசிரியர்களால் இலகுவான முறைகளில் கற்பிக்கப்படும்.

தொடர்பு:
திருமதி ச. ஆறுமுகராஜா,
மதவடி ஒழுங்கை,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்-

(3553)

---

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## பொது அறிவித்தல்

### (உள்ளூராட்சி மன்றங்களான சுன்னாகம், உடுவில், ஏழாலை பிரதேசங்களை உள்ளடக்கியவை)

# புதிய மின் கட்டணம்

1990-04-01 ஆந் திகதி தொடக்கம் மின்சக்தி எரிபொருள் அமைச்சின் பணிப்பின் பிரகாரம் சுன்னாகம், உடுவில், ஏழாலை பிரதேசங்களில் புதிய விகிதாசாரப்படி மின் கட்டணங்கள் அறவிடப்படும், எனப் பொதுமக்களுக்கும் மின்நுகர்வோருக்கும் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது. எனவே, இவ்வுயர்ச்சியினைக் கருத்திற் கொண்டு மின்பாவனையாளர்கள் தங்கள் மின் நுகர்ச்சியை வீண்விரயம் செய்யாமல் கட்டுப்பாட்டுடனும், அளவுடனும் உபயோகித்துப் பண விரயங்களைக் கட்டுப்படுத்துமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**1. வீட்டுப் பாவனைக்குரிய இறுப்புக் கட்டணம்**

1. இந்த இறுப்பனவு தனியார் வசிப்பிடங்களில் மின்சாரத்தை வீட்டுப் பாவனைக்காக பாவிப்பவர்களுக்கும் (2) அப்படியான வீடுகளில் 25%க்கு மேற்படாத இடப் பரப்பினை (ஆகக் கூடியது 400 சதுர அடி) ஏதும் வியாபாரம் அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிப்போருக்கும் பொருந்தும்.

அ. மாதாந்த நிலையான கட்டணம் ........................ரூ. 10/-ம்
ஆ. 1—10 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு .................... —/ 60 சதமும்
இ. 11—50 அலகுகளுக்கு அலகொன்றுக்கு ....................ரூ. 1/20 ம்
ஈ. 51—100 அலகுகளுக்கு அலகொன்றுக்கு ....................ரூ. 2/ ம்
உ. 101—450 அலகுகளுக்கு அலகொன்றுக்கு ..................ரூ. 3/25ம்
அத்துடன் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் எரிபொருட் சீராக்கல் கட்டணமும்.
ஊ. 450 அலகுகளுக்கு மேல், அலகொன்றுக்கு ரூ. 4/25ம் அத்துடன் எரிபொருட் சீராக்கல் கட்டணமும் அறவிடப்படும்.

மேலும்

2. வியாபார நோக்கத்திற்காக அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் இடப்பரப்பிற்காக 25% மேலதிகக் கட்டணம் கீழ்வரும் விகிதாசாரப்படி அறவிடப்படும்.

200 சதுர அடிவரையும் ........ ரூ 30/-
200—300 சதுர அடிவரையும் ........ ரூ. 40/-
300—400 சதுர அடிவரையும் ........ ரூ. 50/-

**2. சமய சம்பந்தமான இடங்கள் அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கான இறுப்பு**

இவை பகிரங்க வணக்கத் தலங்கள் இத்தலங்களுக்குள் அல்லது இத்துடன் சேர்ந்துள்ள இடங்களிலுள்ள பூசகரின் வசிப்பிடம், சமூக சேவைப் பணிப்பாளரினால் சான்றிதழ் வழங்கப்பட்ட தர்மஸ்தாபனங்கள், முதியோர் அநாதை மடங்கள், வலது குறைந்தோர் விடுதிகள் போன்றவற்றுக்கான இறுப்பாகும்.

அ. மாதாந்த நிலையான கட்டணம் ........................ ரூ. 10/-ம்
ஆ. முதல் 150 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு .............. ரூ 1/-ம்
இ. 150க்கு மேற்பட்ட அலகுகளுக்கு, அலகொன்றுக்கு...... ரூ. 3/-ம்
எரிபொருள் சீராக்கற் கட்டணமும் அறவிடப்படும்.

அல்லது

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தர்மஸ்தாபனங்கள் சமய வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றுக்கான 01-03-85 ஆம் திகதி தொடக்கம் மீளாய்வு செய்யப்பட்ட இறுப்பின் பிரகாரம் வரையறுக்கப்படாமல் இச்சலுகையைப் பெற்று வந்தவர்களுக்கு 1987ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த நுகர்ச்சியின் அலகுகளின் அலகொன்றிற்கு ரூபா 1/-ம் (எரிபொருள் கட்டணம் விலக்கப்பட்டுள்ளது) இச் சராசரிக்கு மேற்பட்ட அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 3/-ம் அதற்கான எரிபொருட் சீராக்கல் கட்டணமும் விதிக்கப்படும்.

**3. வீதி வெளிச்சம்**

பிரதேச சபையால் ஈடு செய்யப்படும்.

**4. பொது நோக்கங்களுக்கான இறுப்பனவு**

இவை கடைகள், அலுவலகங்கள், வங்கிகள், பண்டகசாலைகள், பொதுக் கட்டடங்கள், ஆஸ்பத்திரிகள், கல்வி நிறுவனங்கள், பொழுது போக்கு இடங்கள் மேலும் இது போன்ற இடங்களுக்குப் பொருந்தும்.

4-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வீ. ஏக்கும், குறைவான வழங்கல்களுக்கும் பொருந்துவன.
அ. ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றுக்கு ரூ. 3/50ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்
ஆ. கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும், 10 கேவீஏ வரையிலும் ரூ. 50/-
10 கே வீ ஏக்கு மேல் 50 கே வீ ஏக்குக் குறைய ரூ. 150/-ம் அறவிடப்படும்.
4-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வீ ஏக்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்கும் பொருந்துவன.
அ. அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 3/50ம் அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
ஆ. மாதாந்தம் பெறப்பட்ட உச்சத்தேவையின் கே வீ ஏ ஒன்றுக்கு ரூ. 175/- வீதப்படியும்
இ. நிலையான கட்டணம் ரூ. 300/-ம் அறவிடப்படும்.

**5. கைத்தொழில் இறுப்பனவு**

இவை முழுமையாகவோ அல்லது பிரதானமாகவோ தொழிற்சாலைகள், தொழிற்களங்கள், வார்ப்புச் சாலைகள், எண்ணெய் ஆலைகள், நூற்பு நெசவு நிலையங்கள், பம்புநிலையங்கள், துறைமுக கப்பல் த[illegible] இதனையொத்த கைத்தொழில் நிர்மாணங்களுக்கான மின் இரசாயன. மின் இயக்க நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகும்.

5-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வீ ஏக்குக் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்.
அ ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றிற்கு ரூ. 3/50ம் அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
ஆ. கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும், 10 கே வீ ஏ வரையும் ரூ 50/-ம்
10 கே வீ ஏக்கு மேல் 50 கே வீ ஏக்குக் குறைய ரூ. 175/-ம் அறவிடப்படும்.
5-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வீ ஏக்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்கும் பொருந்தும்.
அ. அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 3/50ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
ஆ. மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே வீ ஏ ஒவ்வொன்றிற்கும் ரூ 175/- வீதமும்
இ. நிலையான கட்டணம் ரூ. 300/- ம் அறவிடப்படும்.

**6. ஹோட்டல் இறுப்பனவு**

இவை உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் அதனையொத்த இடங்களுக்குப் பொருந்தும்.

6-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வீ ஏக்குக் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்.
அ. அலகு ஒவ்வொன்றிற்கும் ரூ 3/50ம் அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
ஆ. கீழ் வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும், 10 கே வீ ஏ வரையும் ரூ. 50/-ம்
10 கே வீ ஏக்கு மேல் 50 கே வீ ஏக்குக் குறைய ரூ. 175/-ம் அறவிடப்படும்.
6-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வீ ஏக்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்கும் பொருந்தும்.
அ. அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 3/50ம் அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
ஆ. மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே வீ ஏ ஒன்றுக்கு ரூ. 175/- வீதப்படியும்.
இ. நிலையான கட்டணம் ரூ. 300/-ம் அறவிடப்படும்.

**7. தற்காலிக மின் விநியோகம்**

அ. அலகு ஒன்றுக்குக்கு ரூ. 3/50ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்
ஆ. பொருட்களின் வாடகையாக பெறுமதியின் 10% மும்
இ. கூலிகள் மேற்பார்வைக் கட்டணமும்.
ஈ. நுகர்ச்சிக்கான ஒரு வைப்புப் பணமும் அறவிடப்படும்.

**8. பொது அறவீடுகள்**

அ. புதிய நிறுவுதல்களுக்கும் ஏற்கனவே உள்ள நிறுவுதல்களின் விஸ்தரிப்புகளுக்கும் முதல் சோதனை இலவசம்.
ஆ. முதல் சோதனை திருப்தியளிக்கவில்லையாயின் ஒவ்வொரு மேலதிக சோதனைகளுக்கும்.
ஒரு நிலை நிறுவுதல் ........................ ரூ. 100/-
மூன்று நிலை நிறுவுதல் ...................... ரூ. 200/-

**2. மானிப் பரிசோதனை**

பாவனையாளரின் வேண்டுதலின் பேரில் மானிப் பரிசோதனை ரூ. 100/- மானியம் செம்மை இல்லாத தன்மை 2½ சதவீதத்தை விடக் கூடவோ அல்லது குறைவாகவோ காட்டுமேயானால் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும்.)

**3. கொடுப்பனவுகளின் தாமதத்திற்கான விதிப்பனவுகள்**

பாவனையாளர் ஒருவரின் மின்சார விதிப்பனவுக் கணக்குகள் 30 நாட்களுக்கு மேல் நிலையாகவுள்ள சந்தர்ப்பத்தில் அம் மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதற்குக் கட்டளை இடப்படும். துண்டிப்புக் கட்டளை இடப்படுமாயின் நிலுவைத் தொகையுடன் அதன் 10% சதவீத மேலதிகக் கட்டணமும் அத்துடன் துண்டிப்பு நடவடிக்கை எடுக்கும் கட்டணமாக ரூ. 100/-ம் அறவிடப்படும்.

4. ஒழுங்கு விதிகளை மீறுபவர் மீது (மானிகளில் மாற்றம் செய்தல், மானி முத்திரைகள், கட் அவுட் முத்திரைகள் சேதப்படுத்துதல் இவை போன்றவை) அவர்களது மின்சாரம் துண்டிக்கப்படுவதுடன் ரூ 2000/- விதிப்பனவு, அறவிடப்பட்டு, மானியின் பதியப்படாத மின்பாவனைக்காகக் கட்டணம் சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டு அக்கட்டணத்துடன் 25% மேலதிகக் கட்டணமும் அறவிடப்படும். மதிப்பீட்டு முறையும் காலமும் சபையின் தன் விருப்பு உரிமையைப் பொறுத்தது.

5. சட்டவிரோத மின்விஸ்தரிப்புகளை வேறு கட்டடங்களுக்கு (மீற்றர் மூலம்) கொடுத்தலுக்காக மேலதிகக் கட்டணமாக ரூ 300/- அறவிடப்படும்.

6. பாவனையாளர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் மின்விநியோகம் துண்டிக்கப்பட்ட பின் மீண்டும் விநியோகம் வழங்குவதற்கு கட்டணம் ரூ. 150/- அறவிடப்படும்.

7. மின்சாரம் தடைப்படும் போது சேவையின் உருக்கியை மீளப் பொருத்துவதற்காக.

ஒரு நிலைக்கு .................................. ரூ. 20/-ம்
மூன்று நிலைகளுக்கு .......................... ரூ. 30/ம் அறவிடப்படும்

இது விடயமாக இன்னும் பூரண விளக்கம் தேவையாயின் சுன்னாகம் அல்லது உடுவில், ஏழாலை உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். காலதாமதமாகச் செலுத்தப்படும் நிலுவைப் பணங்களுக்கு மேலதிகப் பணம் செலுத்த வேண்டியதுடன் துண்டிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படவிருப்பதால் தயவு செய்துமாதாந்த சிட்டைகள் வரும் வரையும் காத்திருக்காமல் மாதாந்தம் தவறாமல் குறைந்தது ஒரு சராசரி தொகையைக் காரியாலயத்திற் சென்று செலுத்தி வருவதால், மேலே கூறிய மேலதிக பணமோ அல்லது துண்டிக்க வேண்டிய சந்தர்ப்பத்தையோ சுலபமாக விலக்கிக் கொள்ளலாம் எனவும் ஆலோசனை கூற விரும்புகிறேன்.

**ஆறுமுகம் மகாலிங்கம்,**
விசேட ஆணையாளர்,
வலி-தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலி-தெற்கு பிரதேச சபை அலுவலகம்,
சுன்னாகம். 1990

[சி-5015]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர்

**பொருள்:**

காதலர் எப்போதும் என் உள்ளத்தில் மகிழ்ந்து வாழ்கின்றார்; ஆனால் அதை அறியாமல் 'பிரிந்து வாழ்கின்றார், அன்பில்லாதவர்,' என்று இந்த ஊரார் அவரைப் பழிப்பர்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
14 - 05 - 1990 த. பெ இலக்கம் 25

# ஸ்ரீமாவோவின் காலிப் பேச்சு!

எதிர்பார்த்தவாறு, எதிர்க்கட்சித் தலைவியாக, வழமையான தென்னிலங்கை அரசியல் வாதியாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க செயற்பட்டிருக்கிறார்! தமிழர்கள் விடயத்தில் தென்னிலங்கைக் கட்சிகள், கடந்த 42 வருடங்களாக பின்பற்றிய பாரம்பரியத்தை அவர் கைக்கொண்டிருக்கிறார்!

ஆம்! காலிக் கோட்டையில் கடந்த சனிக்கிழமை நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் சிங்கள அரசியல்வாதிகளின் தன்மையை வெளிப்படுத்தி இருக்கிறார். அவர்களின் உள் எண்ணத்தை பிரதிபலித்து அம்பலமாக்கி இருக்கிறார்.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு ஒப்பமாட்டோம். அதனையே காயாக வைத்து அரசியல் சதுரங்கம் ஆடுவோம். அரசாங்கத்தைச் செல்வாக்கு இழக்கச் செய்வதற்கு தமிழர் உரிமைப் பிரச்சினையையே வழமை போல துரும்புச் சீட்டாகப் பயன்படுத்துவோம். இதில் எவரும் சந்தேகம் அடைய வேண்டியதில்லை. தமிழர் பிரச்சினையை விட்டால் தென்னிலங்கையில் எதிர்க் கட்சிகள் உயிர் வாழ்வதற்கு வேறு என்ன பொருத்தமான 'டோஸ்' இருக்கப் போகிறது?

ஆகவே நாசி அழிந்தாலும் சரி, மக்கள் இறந்தொழிந்தாலும் சரி, பொருளாதாரம் பாழ்பட்டுப் போனாலும் சரி, தமிழர்களின் உரிமைப் பிரச்சினையைத் தீர்க்க விடமாட்டோம். அது தீர்ந்தால் எமக்கு அரசியல் வாழ்வு ஏது? — என்று கேட்பது போல அவர் காலித்தனமாகக் காலியில் கத்தியிருக்கிறார்.

நாட்டின் மூன்றில் ஒரு பகுதி விடுதலைப்புலிகளிடம் (தமிழர்களிடம் என்பதன் மறுவடிவம்) ஒப்படைக்கப்பட்டு விட்டதாக அவர் அழுதிருக்கிறார். தமிழ்ப் பிரதேசங்களைத் தமிழர்கள் ஆளக்கூடாது. சிங்களவரே ஆள வேண்டும் என்ற பேரினவாதம் தொனிக்கும் அந்த வாசகமே அவர்களின் உள்ளக் கிடக்கையைப் புலப்படுத்துகிறது.

ஓ! தமிழர்களே உங்கள் உரிமைகளை வழங்க நாம் அனுமதிக்கமாட்டோம்! கடந்த காலத்தின் பாடங்களை நாம் படிக்கத் தயாரில்லை. அல்லல்களை அனுபவிப்பதும் அழிவதும் மக்கள் தானே. அவற்றைப்பற்றி எங்களுக்கு என்ன அக்கறை. நாங்கள் அரசியல்வாதிகள் அல்லவா? அது உங்களுக்குத் தெரியாதா? தமிழர்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்பது சம்பந்தமாக எங்களுக்கு எந்தவித மனமாற்றமும் ஏற்படவில்லை. ஜனாதிபதி ஏதேதோ எல்லாம் சொல்கிறார். நாம் அவற்றைக் காதில் போட்டுக் கொள்ளத் தயாரில்லை—

வந்த பின்னர் நொந்து கொள்வது, தவறுக்காக வருந்துவது என்பதெல்லாம் வெறும் போலித்தனமே. சிங்கள மக்களில் ஒரு சிலர் உங்கள் உரிமைகளை வழங்கி, சமாதானமாக இருக்க விரும்பலாம். ஆனால் நாம் இருக்கிறோமே, எமது விஷமப் பிரசாரத்தின் மூலம் அதனையும் முறியடித்து விடுவோம். எனவே உங்கள் உரிமைகளை வழங்குவது சம்பந்தமாக தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மனம் மாறிவிட்டார்கள் என்றோ; பாடம் படித்துத் திருந்திய நிலைக்கு வந்து விட்டார்கள் என்றோ வீணாக ஏமாந்து போகாதீர்கள்! —

காலியில் வைத்து தமிழர்களுக்கு இப்படிச் செய்தி விடுத்திருக்கிறார் ஸ்ரீமாவோ.

அவர் தென்னிலங்கை எதிர்க்கட்சிகளின் உண்மை உருவத்தை உரிந்து காட்டியிருக்கிறார் என்றே தமிழர்கள் எச்சரிக்கையுடன் கொள்ள வேண்டும். ஏனெனில் அந்தக் கூட்டம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் மட்டும் நடத்தப்படவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி என்பனவும் சேர்ந்து நடத்திய கூட்டம்.

ஆதலால் சிங்களப் பிரதேசத்து எதிர்க்கட்சிகள் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் எப்படி நடந்து கொள்ளப் போகின்றன என்பதற்கு ஸ்ரீமாவோவின் பேச்சு ஒரு முத்தாய்ப்பு என்றே கருத வேண்டும்.

அரசாங்கத்தைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும். தாம் ஆட்சிக் கட்டிலில் ஏற வேண்டும். அதற்கு மக்களைத் திருப்ப வேண்டும். அதாவது அவர்களின் ஆதரவைப் பெற வேண்டும், தூண்டிவிட வேண்டும் இலகுவில் உணர்ச்சி கொள்ள வைக்கும் இனப்பிரச்சினையையே தூக்கிப் பிடிக்க வேண்டும். இந்தப் பழக்கப்பட்ட கருவியையே தென்னிலங்கை அரசியல்வாதிகள் கையில் ஏந்தப் போகிறார்கள். — இப்படி ஓர் அறிவிப்பாகவே ஸ்ரீமாவோவின் காலிப் பேச்சு அமைகிறது.

இந்தப் போக்கு நாட்டில் மீண்டும் ஓர் அரசியல் நெருக்கடிக்கு வித்திடுகிறது என்பதைத் தமிழர்கள் உணராமல் இருக்க முடியாது. பிரேமதாச அரசு இவற்றையெல்லாம் தாண்டித் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பலம் உடையதா என்ற கேள்வியும் தானாகவே எழுகிறது.

எதற்கும் தமிழர் தரப்பில் மிகுந்த அரசியல் அவதானமும், உயர்ந்த ராஜதந்திரமும் தேவை. அவற்றுக்கு உறுதுணையாக மக்கள் சக்தி — தமிழர் ஒற்றுமை — அணி திரள்வது பிரதானம்.

# சகல மாவட்டங்களுக்கும் ஜனாதிபதி விஜயம் செய்வார்

இம்மாதம் 26 ஆம் திகதி முதல் ஜனாதிபதி பிரேமதாஸா அனைத்து மாவட்டங்களுக்கும் விஜயம் செய்யத் தீர்மானத்திருக்கிறார்.

முதலில் விஜயம் செய்ய பதினொரு மாவட்டங்களை அவர் தெரிவு செய்துள்ளார்.

இத்தகவலை ஜனாதிபதி பிரேமதாஸாவே ஐ. தே. க செயற்குழுக் கூட்டத்தில் வெளியிட்டார். (உ-எ)

# தம் மாதாந்த வேலைத் திட்டத்தை ஆசிரியர்கள் தயாரிக்க வேண்டும்

## யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம் முதல் அமுல்

யாழ்ப்பாணம், மே. 14

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை ஆசிரியர்களும் ஒவ்வொரு மாதமும் வேலைத்திட்ட அறிக்கை ஒன்றை தயார் செய்ய வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதற்கான உத்தரவை விடுத்துள்ளார்.

ஆசிரியர்கள் சிலர் உரிய கடமைகளைச் செய்யாது விடுகின்றனர். சிலர் உண்மையான கடமையுணர்ச்சியுடன் சேவையாற்றியும் அவர்களுக்குரிய பதவியுயர்வு மற்றும் சலுகை கிடைப்பதில்லை.

இவ்வாறான ஆசிரியர்களை இனங் காணும் பொருட்டே இந்த மாதாந்த அறிக்கைத் திட்டம் அமுல் செய்யப்பட இருப்பதாக அறிய வந்தது.

மாதாந்த அறிக்கைக்கான சுயமதிப்பீட்டுப்படிவம் ஒன்று தயாரிக்கப்பட்டு சகல ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும்.

இந்தப்படிவத்தில் பாடசாலை, ஆசிரியர் பெயர், தராதரம், கற்பிக்கும் வகுப்பு பாடங்கள் என்பனவற்றுடன் ஒவ்வொரு மாதத்திலும் கற்பித்து முடிக்காத பாட அலகுகள், அவ்வாறு கற்பித்து முடிக்காத பாட அலகுகளை முடிப்பதற்கானவிசேட வகுப்புகள், அவ்வாறான வகுப்புகள் பற்றிய எண்ணிக்கை விவரம், கற்பித்தலுக்கு பயன்படுத்தப்பட்ட சாதனங்கள், நடத்தப்பட்ட வகுப்புப் பரீட்சைகளின் தொகை, ஆசிரியரின் லீவு விவரம், கற்பித்தலை மேற்பார்வை செய்தோரின் பெயர், பதவி விவரம் என்பனவும் கோரப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் தயார் செய்யப்பட்டு பாடசாலைகளில் வைக்கப்பட வேண்டும் என்றும், இந்த மதிப்பீட்டு அறிக்கையைக்கொண்டு திடீர் பரீட்சைகள் மாணவர் மட்டத்திலும், ஆசிரியர் மட்டத்திலும் நடத்தப்படும் என்றும்—

பிரஸ்தாப படிவத்தில் ஒரு பகுதியேனும் நிரப்பப்படாமல் இருந்தால் அவர் கடமையை சரிவரச் செய்யவில்லை எனக்காரணம் காட்டி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-9)

## சமய சந்நிதிகளில்

### மகோற்சவம்

மயிலணி, மே 14

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம் மகோற்சவம் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், 24 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ - 89)

## ★யாழ்.பல்கலைக்கழகத்தில்

# பொறியியற்பீடம் ஆரம்பிக்க இவ்வருடம் நிதி இல்லை

பொறியியற்பீடத்தை ஆரம்பிக்க யாழ். பல்கலைக்கழகம் கோரியுள்ள 15 கோடி ரூபா நிதி இவ்வருடம் வழங்கப்படமாட்டாது.

இந்தத்தொகை இந்த வருடத்துக்கான நிதிஒதுக்கீட்டில் சேர்க்கப்படவில்லை என பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுனா அலுவிகார உதயனுக்குத் தெரிவித்தார்.

பொறியியற்பீட கற்கை நெறியை (Course) திட்டமிட்டு தயார் செய்துதரும்படி யாழ். பல்கலைக்கழகத்திடம் — கேட்கப்பட்டிருப்பதாகவும் —

அது இதுவரை ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும்—

அது சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே நிதி ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்அவர்மேலும் சொன்னார்.

மேற்படி கற்கை நெறியை தயார் செய்வதற்கான அலுவலகர் (Staff) வசதி யாழ் பல்கலைக்கழகத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் சொன்னார். (உ-2)

## ஜூன் 23 இல் ஆரம்பமாகும்

# நயினை உற்சவம் குறித்து ஆலோசனைக் கூட்டம்

நயினாதீவு, மே. 14

நயினாதீவு. நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஜூன் மாதம் 23-ம் திகதி ஆரம்பமாக உள்ளது.

பிரஸ்தாப ஆலய உற்சவ சவகால ஒழுங்குகள் பற்றிய கூட்டம் இன்று 14 ஆம் திகதி திங்கட்கிழமை வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் காலை 10 மணிக்கு நடைபெறஉள்ளது

கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்கள், சுகாதாரப்பகுதியினர், சுங்கப் பகுதியினர், வீதிபரிபாலன சபையினர், லடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் உட்பட சகல தீவுப்பகுதிப் படகுச் சொந்தக்காரர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்,

பிரஸ்தாப கூட்டத்தில் பின்வரும் விடயங்கள்பற்றி ஆராயப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது,

★ நயினாதீவு உற்சவத்திற்கு அரசு 7 [illegible] மட்டுமே ஒதுக்கியுள்ளது. இது போதாமையால் [illegible] திக நிதியைப் பெறுவது.

★ இம்முறை சுமார் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் வருவர் என எதிர்பார்க்கப்படுவதால், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

★ பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் இரவிலும் படகுச் சேவைகள், பஸ் சேவைகளை நடத்துதல்.

★ இறங்குதுறைகளைப் பராமரிக்கவும், பிரயாணிகளின் வசதிகளையும், நலன்களைச் சீர்படுத்துவதற்கும் ஆயம் அறவிடுவது.

★ பிரயாணிகள் படகுகளின் தரம்பற்றி தகைமைக் சணிப்பாளரிடமிருந்து சான்றிதழ் பெறுதல்.

★ படகுகள் போதாதவிடத்து, வீதி புனரமைப்பு அதிகாரசபையினால் நெடுந்தீவு-குறிகாட்டுவான் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புதிய படகையும் உற்சவ காலத்தில் நயினாதீவுக்கு சேவையில் ஈடுபடுத்துவது குறித்து அனுமதி கோருதல். (ஒ-9)

## விடுதலைப் புலிகள் தலையீட்டால்

# உழவு இயந்திரச் சாரதிகள் வேலைநிறுத்தம்கைவிடப்பட்டது

அம்பாறை, மே 14

சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தத்தில் குதித்தனர் நிந்தவூர்ப் பிரதேச உழவு இயந்திரச் சாரதிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலையீட்டால் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

அம்பாறைமாவட்டத்தின் மிக முக்கிய கிருஷிக பிரிவா சத்திரமும் நிந்தவூர்ப்பிரதேச விவசாயக்கண்டங்களில் சிறுபோக நெற்செய்கையின் ஆரம்பவேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

இந்த வேளையில், உழவு வேலைகளில்ஈடுபடவேண்டிய உழவு இயந்திர சாரதிகள் மாதாந்தம் தற்பொழுது தமக்கு வழங்கப்படும் 1300 ரூபா சம்பளத்தை 2000 ரூபாவாக அதிகரித்துத்தர வேண்டுமெனக் கோரி வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

நிந்தவூர்ப்பிரதேசத்துக்குப் பொறுப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இதுவிடயத்தில் தலையிட்டு உழவுஇயந்திர உரிமையாளருக்கும், சாரதிகளுக்குமிடையே சமரசம் செய்து வைத்தனர்.

இதனை அடுத்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

சமரசப் பேச்சு வார்த்தையின் போது விடுதலைப் புலிகளின் நிந்தவூர்ப்பிரதேசப் பொறுப்பாளர் திரு. விக்ரம், டாக்டர் திரு. வீ. தவயோகநாதன், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் நிந்தவூர்க் கிளைத்தலைவர் ஜனாப் எஸ். எச். அகமட் ஆகியோர் பிரசன்னமாக இருந்தனர். (இ - 14)

## கிளிநொச்சிக்கு

# மேலும் ரூ 130 லட்சம் கிடைத்தது

கிளிநொச்சி மே 14

கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக மேலும் 130 லட்சம் ரூபா புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் மீள குடியமர்வு பணம் வழங்க 40 லட்சம் ரூபாவும், வீடுகள் புனரமைக்க 20 லட்சம் ரூபாவும் உற்பத்தி முயற்சிகளுக்கு 70 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் உதயனுக்குத் தெரிவித்தார். (இ-76)

## யூனியன் கல்லூரியில்

# ஐ.பி. துரைரத்தினம் மண்டபம்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் முன்னாள் அதிபர் திரு. ஐ. பி. துரைரத்தினம் ஞாபகார்த்த மண்டபம் அமைப்பது என்று கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச்கூட்டம் திரு. கே. என். இராஜரட்ணம் தலைமையில் நடைபெற்ற சமயமே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்ட ஆரம்பத்தில் பொருளாளராக இருந்து அகால மரணமடைந்த திரு. எஸ். பத்மநாதனுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ கல்லூரிக்குமுன் பஸ்கள் நிறுத்துவதைத் தடைசெய்ய வேண்டும்.

★ கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்துதல். (இ - 68)

### மலையக மக்கள் முன்னணி முறையீடு

தலவாக்கெல்லையில் தமது மேதினக் கூட்டத்தை நடத்த விடாமல் பொலீஸார் தடை செய்தனர் என்று ஜனாதிபதி, பாதுகாப்புத்துணை அமைச்சர் பொலீஸ்மா அதிபர், நுவரெலியா பொலீஸ் அதிபர் ஆகியோருக்கு மலையக மக்கள் முன்னணி முறையீடு செய்து மகஜர் அனுப்பியுள்ளது.

மலையக மக்கள் முன்னணியினரின் மே தினச் சுவரொட்டிகள் அகற்றப்பட்டது சம்பந்தமாகவும் இதில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (இ-73)

### கால் நடைநோய் தடுப்பு மருந்து

மானிப்பாய் மே 14

மானிப்பாய், சண்டிலிப்பாய் பகுதிகளில் கால்நடை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை கால்நடை வைத்திய அதிகாரிகள் துரிதமாக மேற்கொண்டுள்ளனர்.

சண்டிலிப்பாயில் உள்ள கால்நடை வைத்திய செயலகத்தில் சனிக்கிழமைகளில் கோழிகளுக்கான நோய்த் தடுப்பு மருந்து, ஊசி மூலம் ஏற்றப்படுகின்றது. கோழிப் பண்ணையாளர் முன் அறிவித்தல் தரும் பட்சத்தில் பண்ணைகளுக்கு நேரடியாகச் சென்று மருந்து ஏற்ற ஆவன செய்யப்படும் எனவும், 50 மாடுகளை ஒரு தொகுதியாக ஒழுங்கு செய்தால் தடுப்பு மருந்தைப் பயனுள்ள வகையில் பாவிக்கலாம் எனவும் இச் செயலகத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். [ப-90]

### வாகனம் மோதி மின்கம்பம் சேதம்

மயிலணி மே 14

கடந்த வெள்ளியன்று சுன்னாகம் கே.கே.எஸ். வீதி பெற்றோல் நிலையத்தருகே வாகனம் ஒன்று மின்கம்பத்துடன் மோதியதால் கம்பம் முறிந்தது

மின்சாரசபை எடுத்த துரித நடவடிக்கையை அடுத்து தடைப்பட்ட மின்விநியோகம் மறுநாள் காலையில் சீரானது.

விபத்து நடைபெற்றவுடன் மின்சாரசபையினர் மின்விநியோகத்தை உடனடியாகத் துண்டித்ததால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

சுன்னாகம் வலிகாமம் மேற்கு பிரதேச சபை மின் பொறியியலாளர்களும் ஊழியர்களும் மின் விநியோகத்தை மீண்டும் ஏற்படுத்தும் முயற்சியில் பெரும் பங்காற்றினர். (ப -89)

### காணி உறுதி வழங்கல்

கிளிநொச்சி மே 14

கிளிநொச்சி மாவட்டத்தில் சுவர்ணபூமி திட்டத்தின் கீழ் காணி உறுதி வழங்கும் வைபவம் ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி வன்னேரிக் குளத்தில் நடைபெறும்.

வன்னேரிக்குளத்தை சேர்ந்த 150 காணிகளுக்கும், அக்கராயன் குளத்தை சேர்ந்த 200 காணிகளுக்கும் உறுதி வழங்கப்படும்.

கிளிநொச்சி மாவட்ட அரசங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் சுவர்ண பூமி உறுதியினை உரித்தாளர்களுக்கு வழங்குவார். (ப-6)

## வாசகர் திருமுகம்

### மகிழ்ச்சி தரும் உதயன் செய்தி

உதயன் 3 5 - 90 இதழின் 6ஆம் பக்கத்தில் ''அமைச்சரின் சபதம்'' என்ற செய்தியைப் பார்த்தேன்.

மோசடி ஏஜென்சிகளை நம்பி எமது பகுதிக்கிராம மக்கள் வெளிநாடு செல்லும் ஆசையால் காணிகளை நகைகளை விற்றும் கூடிய விதத்துக்கு கடன்பட்டும் முற்பணஞ் செலுத்திவிட்டு 3, 4 வருடங்களாகப் பிரயாணஞ் செய்ய முடியாமலும் கொடுத்த பணத்தைதிருப்பிப் பெற முடியாமலும், அதற்காகப் பலதடவை கொழும்புக்குப் போய் ஏஜென்சிகளைத் தேடித்திரிந்து பொய் வாக்குகளை நம்பி ஏமாற்றத்துடன் திரும்புவதையும், கண்ணீர் விடுவதையும் காண்பதோடு அவர்களின் முறையீடுகளை அரசுக்கும் வேறு அமைப்புகளுக்கும் அறிவித்தும் உருப்படியான பலன் பெற்றுக் கொடுக்க முடியாமற் சிரமப் பட்ட எனக்கு இச் செய்தி மகிழ்ச்சி தருவதாகவுள்ளது.

இனி அமைச்சரின் துணையோடு முயற்சிக்கலாமல்லாவா?

சி. இராசரத்தினம்
தலைவர்,
தீவுப்பகுதி தெற்கு,
பிரசைகள் குழு.

### நஷ்ட ஈடு கோர முடியாதா?

1985 இல் இந்தியாவின் போபாலில் ஏற்பட்ட நச்சு வாயுக் கசிவினால் பாதிக்கப்பட்ட 5 லட்சம் மக்களுக்கு இந்திய அரசு அமெரிக்க யூனியன் காபைட் நிறுவனத்திடமிருந்து பல கோடிக்கணக்கான டாலர் பணத்தினை நஷ்டஈடாகப் பெற்றுக் கொடுக்க முயற்சி எடுத்து வருவது யாவரும் அறிந்ததே. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நஷ்டஈடு கிடைக்கத்தான் வேண்டும்.

அதேபோல 10 - 10 - 1987 முதல் இந்திய அமைதி காக்கும் படை செய்த படுபாதகப்படு கொலைகளுக்கும், களவுகளுக்கும், உடமைச் சேதங்களுக்கும் இந்திய அரசாங்கத்திடம் நஷ்ட ஈடு கோரி இலங்கை உயர் நீதிமன்றத்திலோ, அல்லது சர்வதேச நீதி மன்றத்திலோ வழக்குத் தாக்கல் செய்து, நஷ்ட ஈட்டினைப் பெற்று பாதிப்புக்களினால் அல்லலுறும் மக்களுக்கு தர முடியாதா?

இ. செ. ஆனந்தவேல்,
வல்வெட்டித்துறை.

# செய்திக்கொத்து

### இராசகோபுரம்

மானிப்பாய் மே 14

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயில் இராசகோபுரம் பெரும் பணச் செலவில் உருப்பெற்று வருகிறது. இதற்கான சிற்ப வேலைப்பாடுகளை அராலி சிற்பாசாரியார் திரு. யோகநாதன் மேற்பார்வையில் நடைபெறுகின்றன [ப-90]

### கோயிலில் திருட்டு

மானிப்பாய் மே 14

சுன்னாகம், மயிலணி கந்தசாமி கோயில் சதவு மற்றும் வசந்த மண்டபக் கதவுகள் உடைக்கப்பட்டுப் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

மூலஸ்தான சிலை பெயர்க்கப்பட்டு அதன் கீழிருந்த பெறுமதிமிக்க உலோகத் தகடு, வசந்தமண்டபப் பொருள்கள் என்பன எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளிடம் இது குறித்து முறையிடப்பட்டுள்ளது. [ப-90]

### மொறிஷியஸ் தமிழர் தினம்

யாழ்ப்பாணம் மே 14

குரும்பசிட்டி உலகத் தமிழர் ஆராய்ச்சி நிலையத்தின் 'மொறிஷியஸ் தமிழர் தினம்' இம்மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3. 00 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் கொண்டாடப்படும்.

இந் நிகழ்ச்சியில் மொறிஷியசில் நடந்த 7ஆவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடுபற்றிய வீடியோக் காட்சி மொறிஷியஸ் தமிழ் ஏடுகள், தமிழ் மொழியில் வெளியிடப்பட்ட தபால் தலைகள், காசுத்தாள்கள், மொறிஷியஸ் தமிழர் பண்பாட்டுவாழ்வைப் பிரதிபலிக்கும் புகைப்படங்கள் ஆவணங்கள் பற்றிய சண்காட்சியும் இடம்பெறும். (இ-7)

### வீதி சிரமைப்பு

வெற்றிலைக்கேணி மே 14

வெற்றிலைக்கேணிச் சந்திக்கும் சட்டைக்காட்டுச் சந்திக்கும் இடையில் நீண்டகாலமாக போக்குவரத்துக்கு உதவாமல் சீரற்றிருந்த சுமார் 2 மைல் நீள வீதியை அப்பகுதி மக்கள் சிரமதானம் மூலம் செப்பனிட்டு வருகின்றனர். (ப - ரி)

### புதிய வாகனங்கள்

கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்கில் கிளிநொச்சி கச்சேரிக்கு மூன்று புதிய வாகனங்கள் புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. (ப-76)

### மிளகாய்ச்செய்கை

வெற்றிலைக்கேணிப் பகுதியில் செய்கை பண்ணப்படும் மிளகாய்ச் செடிகள் ஒரு புதுவித நோயினாற் பாதிக்கப்பட்டுள்ளன. (ப - ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரவேல்- அமெரிக்க உறவு சீர்குலையும் ஆபத்து!

ஜெருசலம் மே 13

அமெரிக்காவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையேயான ராஜரீக உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

சோவியத் யூதர்களை ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப்பிரதேசத்தில் குடியமர்த்தும் இஸ்ரவேலின் நடவடிக்கையை அமெரிக்காவும் அரபு நாடுகளுடன் சேர்ந்து கண்டித்து வருவதாக டெல்அவிவ் அரசு குற்றஞ் சாட்டி உள்ளது. யூதர்களைக் குடியமர்த்தும் நடவடிக்கையைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்றை ஐ நா.பாதுகாப்புச் சபையில் அரபு நாடுகள் கொண்டு வர முயற்சித்து வருகின்றன.

இதனைத் தயாரிப்பதற்கு அமெரிக்காவும் ஆதரவளிப்பதாக வந்த செய்தியைத் தொடர்ந்து, இஸ்ரவேல் வெளியுறவு அமைச்சர் மோஷே ஏரன்ஸ் அமெரிக்கத் தூதரை அழைத்து அரசின் எதிர்ப்பைத் தெரிவித்தார். (எ)

## பர்மாவில் பொதுத் தேர்தல் மே 27 இல் நடைபெறும்!

ரங்கூன் மே 13

பர்மாவில் பொதுத்தேர்தல் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இத்தேர்தல் சுதந்திரமானதாகவும், நீதியாகவும் நடத்தப்படும் என்று பர்மாவின் இராணுவ ஆட்சியாளர் அறிவித்து உள்ளனர்.

இத்தேர்தலில் பலஅரசியல் கட்சிகள் பங்குபற்றுகின்றன.

இதனிடையில் —எதிர்கட்சிகளின் தேர்தல் பிரசாரக்கூட்டங்களை இராணுவத்தினர் குழப்பிவருகின்றனர் என்று ரங்கூனில் உள்ள மேற்குலக ராஜதந்திரிகள் எடுத்துக் கூறினர். (எ)

## தமிழ்நாடு - ஆந்திராவில் மீண்டும் மேல்சபைகள்

புதுடில்லி, மே 13

தமிழ் நாட்டிலும் ஆந்திர பாநிலத்திலும் மீண்டும் மேல் சபைகளைக் கொண்டு வரும் சட்டமூலம் புதுடில்லி ராஜ்ய சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய சுதந்திர தினமான எதிர்வரும் ஆகஸ்ட் 15 ல் தமிழ்நாட்டில் மீண்டும் மேல் சபை இயங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-எ)

★ எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து

## மீண்டும் நாடாளுமன்ற ஜனநாயகம் வேண்டும்என மலேசியாவில் இயக்கம்

### நடத்தப்போவதாக முன்னாள் பிரதமர்துங்கு அறிவிப்பு

கோலாலம்பூர் மே 13

நாடாளுமன்ற ஜனநாயகம் மீண்டும் மலேசியாவில் ஏற்பட போராடப்போவதாக முன்னாள் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அறிவித்திருக்கிறார்.

பிரதமர் பதவியில் இருந்து விலகிய பின்னர் அரசியலில் ஓய்வு பெற்று இருந்த ஜனாப் துங்கு அப்துல் ரஹ்மான் மலேசியாவின் பழம் பெரும் அரசியல் தலைவர் ஆவார்.

மீண்டும் தீவிர அரசியலில் இறங்கி விட்டதாக ஜனாப் துங்கு ரஹ்மான் இப்போது அறிவித்திருக்கிறார்.

தற்போது பிரதமராக உள்ள டாக்டர் மஹாதீர் முகம்மத், அதிகாரத்தில் தொடர்ந்து இருக்க அரசியலமைப்புக்கு விரோதமான முறைகளைக் கைக் கொள்வதாக ஜனாப் துங்கு ரஹ்மான் குற்றஞ் சாட்டி இருக்கிறார்.

'' எனது தலைமையிலான அரசுதான் 12 ஆண்டு கால அவசரச் சட்டத்தை ரத்துச் செய்தது. சுகர்ணோ ஆட்சியின் கீழ் எம்மை நசுக்க இந்தோனேஷிய அரசு எடுத்த முயற்சியை எனது அரசு தான் முறியடித்தது. சபா மாநிலத்தைக் கைப்பற்ற பிலிப்பீன்ஸ் எடுத்த முயற்சியையும் எனது தலைமையிலான அரசே தடுத்து நிறுத்தியது'' என்று ஜனாப் துங்கு அப்துல் ரஹ்மான் சொன்னார்.

மலேசியாவில் உள்ள எதிர்க் கட்சிகள் ஜனாப் துங்கு ரஹ்மானுக்கு ஆதரவளிக்க முன் வந்துள்ளன. (எ)

## இம்ரி நாகி பதக்கம்!

புடாபெஸ்ற் மே 13

ஹங்கேரியில் 1956 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட புரட்சியில் பங்கு பற்றிய பழம் பெரும் அரசியல்வாதிகளை பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் சந்தித்தார்.

அப்போது அந்தப் புரட்சியை நடத்திய இம்ரி நாகியின் நினைவான பதக்கம் ஒன்று இளவரசர் சார்ள்ஸுக்கு பரிசாக வழங்கப்பட்டது.

புரட்சியை அடக்க ஹங்கேரிக்குள் நுழைந்த ரஷ்ய இராணுவம் இம்ரி நாகியைக் கைது செய்து சுட்டுக் கொன்றது.

இளவரசர் சார்ள்ஸ் பின்னர் அங்கு நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில்,

' கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் கிழக்கு ஐரோப்பா மார்ச்ஸிஸ சிறை முகாமாக இருந்தது'' என்று வர்ணித்தார். (எ)

## பிரிவினைச் சக்திகளுக்கு தமிழகத்தில் இடம் இல்லை

### தமிழக சட்டசபையில் கருணாநிதி

தமிழகத்தில் எந்தவிதமான பிரிவினை சக்திகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது

இப்படி முதலமைச்சர் கருணாநிதி நேற்று தமிழக சட்டசபை க் கூட்டத்தில் தெரிவித்தார்.

திரு. கருணாநிதி மேலும் சொன்னதாவது;

அரசியல் காழ்ப்புணர்ச்சியின்காரணமாக இந்தமாநில அரசைக் கவிழ்க்க விடுதலைப் புலிகள் பிரச்சினையை சில சக்திகள் ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றன.

எந்தப் பிரிவினை எண்ணங்களுக்கும் தமிழகத்தில் இடமில்லை.

### நேபாளத்திற்கு புதிய யாப்பு

காத்மண்டு, மே 13

நேபாளத்தின் அரசியல் சட்டத்தைத் திருப்பி எழுத 9பேர் கொண்ட ஆணைக் குழுஒன்றை மன்னர் பிரேந்திரா நியமித்திருக்கிறார்,

90 தினங்களில் அரசியல் சட்டம் திருப்பி எழுதப் படவேண்டும் என்றும் மன்னர் ஆணை பிறப்பித்திருக்கிறார். (எ)

### பரீட்சை மோசடி

டாக்கா, மே 13

பங்களாதேஷில் பரீட்சையின் போது ஏமாற்றுவேலைகளில் ஈடுபட்டதற்காக ஐயாயிரத்துக்கு அதிகமான மாணவர்கள் இடை நிறுத்தம் செய்யப் பட்டனர்.

ஏமாற்று வேலைகளில் ஈடுபட்ட மாணவருக்கு உதவியறதகாக 10 ஆசிரியர்கள் வேலையில் இருந்து நீக்சப்பட்டனர். (எ)

### 20 பேர் பலி

மே 13

கொலம்பியா தலைநகர் பொகொட்டாவில் அடுத்தடுதது இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்புச்சம்பவங்களில 20 க்கு அதிக மாணவர்கள் இறந்தனர்.

போதைவஸ்துக் கடத்தல் காரர்களின் சதிச்செயல் இது என்று அறிவிக்கப் பட்டது. (எ)

### பிரதமர் சிங்கின் பிரதம செயலாளர்

பிரதமர்வி. பி. சிங்கின் பிரதம செயலாளரான திரு பி ஜி தேஷ்முக் ஜூலை 31 ஆம திகதிக்குப் பின்னரும் தொடர்ந்து அதே பதவியில் நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதமரின் பிரதம செயலாளராக, அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியால் 1988இல்திரு.தேஷ்முக் நியமிக்கப்பட்டார்

கடந்த டிசம்பரில் தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர் தனது ராஜினாமாவை திரு. தேஷ்முக் சமர்ப்பித்தார். ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திரு தேஷ்முக்கின் தற்போதைய பதவிக் காலம் ஜூலை 31 உடன் முடிவடைய இருக்கிறது. (எ)


குமுலுஸ் D.F. போட்டி

BASF


குமுலுஸ் D. F.

பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி – | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி – | 5 |
| கைத்தெளி கருவி – | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி – | 20 |
| எவரெடி ரோச் லைற் – | 48 |
| ரீ சேட் – | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ன்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.







வெட்டி அனுப்பவேண்டிய பகுதி

பெயர் ______
முகவரி ______
வியாபாரியின் பெயர் ______
முகவரி ______

FINCHEM AGRO DIVISION

பின்லெ கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும்.


## ஓர் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



செல்வன்

### முருகையா பிரபாகரன்

அன்னை மடியில்: 02 – 07 – 1971

அநியாய அழிப்பு: 25 – 04 – 1989

எங்கள் தவச் செல்வமாக, குலவிளக்காக, குடும்பத்தலைவனாக இருந்து வாழ்ந்த எம் செல்வமே. பட்டம் பதவியுடன் பாரினிலே வாழ்வேன் என்று கற்பனை கட்டி வாழ்ந்தாயடா கற்பனைக் கனவுகள் நிறைவேற முன் பதினெட்டு வயதினிலே பயங்கரமாய் வெறிபிடித்த அரக்கர்களால் அநியாயமாக கொலை செய்யப்பட்டாயே!


தம்பி! தம்பி! என்று அன்பு அம்மா தவிக்க! மகனே! மகனே! என்று அன்பு அப்பா தவிக்க! அண்ணா! அண்ணா! என்று பாசமுள்ள சகோதரர்கள் தவிக்க! பிரபா! பிரபா! என்று நண்பர்கள் தவிக்க! நினைவழிந்து நாம் கலங்கித் தவிக்கின்றோம். சாவரினும் உன் நினைவு சாகாதையா! ஓராண்டு என்ன எத்தனை ஆண்டு சென்றாலும் உன் நினைவு எம்மை விட்டு நீங்காதையா நீ போன வழி திரும்பி வருவாய் என்று எதிர்பார்த்து கலங்கி நிற்கும்

உமது அம்மா, அப்பா, சகோதரர்கள், உறவினர், நண்பர்கள்.

கிறேசர் லேன்,
தெல்லிப்பளை.

[3559]

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### முனிசாமி செல்வராஜா

பிறப்பு; 06 – 07 – 1947

இறப்பு: 14 – 05 – 1985

எங்கள் இதயத்தைவிட்டு உந்தன் நீங்காத நினைவுகள் மறையவில்லை. உம் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

அன்பின் மனைவி, பிள்ளைகள், மற்றும் உறவினர்.

முத்துக்கிருஸ்ணர் லேன்,
சுன்னாகம்.

[3547]

## ஓராண்டு நினைவஞ்சலி



### திரு. C. D. பத்மநாதன்

தோற்றம்: 12 - 09 - 1936

மறைவு: 14 – 05 – 1989

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதிந்தனவோ! அத்தனையும் நிஜமாகும் வேளையிலே உங்களை இழந்து மனம் துடிக்கிறோம். நீங்கள் ஆண்டவன் அடியில், விண்ணவர் புனிதருடன் கலந்து விட்டீர்கள். எம்மை அலையாது கலங்காது காக்கின்றீர்கள்.

எல்லாம் வல்ல இறைவா உம்மில் விசுவாசம் கொண்டு உமது இரக்கத்தை நம்பி வாழ்ந்த எங்கள் அப்பா விண்ணரசில் இன்ப சாந்தி பெற அருள்புரிய வேண்டுகிறோம்.

அன்பு மனைவி,
பாசம் நிறைந்த மகன், மகள்.

37, குமாரகோவிலடி,
காங்கேசன்துறை.

[13064]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீ. சி. ஈ (சாதாரண) பரீட்சை; பெறுபேறுகள் ஜூலையில்

கொழும்பு, மே 14
கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட ஜீ. சி. சி ஈ சாதாரணப்பத்திரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் ஜூலை மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெறுபேறுகளைத் தொகுக்கும் வேலை தற்சமயம் இடம் பெறுகிறது.

விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் 98 சத வீதமானவை முடிவடைந்து விட்டன. இவ்வார முடிவில் எஞ்சிய விடைத்தாள்களும் திருத்தப்பட்டுவிடும்.

மார்ச்சில் நடந்த ஜீ. சி. ஈ சாதாரணப்பத்திரப் பரீட்சைகளுக்கு மொத்தம் 5 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

(உ-எ)

## கிணற்றில் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மே 14
கிணற்றில் விழுந்து ஒருவர் மரணமானார். இச்சம்பவம் நேற்று முன்தினம் சுதுமலையில் இடம்பெற்றது. இறந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். நயினார்சாமி வயது70 என்று தெரிவிக்கப்படுகிறது.

கிணற்றுக்குள் இறங்கி அதனைத் துப்பரவு செய்துவிட்டு மேலே ஏறுகையில் தவறி விழுந்து மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## இத்தாலி நன்கொடை

கொழும்பு, மே 14
பாடசாலை மதிய உணவுத் திட்டத்திற்கு இத்தாலி அரசு 45 லட்சம் டாலர் பணத்தை நன்கொடையாக வழங்கியுள்ளது. (ஒ-எ)

மேலை நாடுகளில்

# கேலிச் சித்திரக்காரர் சமூகத்தில் உயர்ந்த இடம் பெறுகிறார்கள்

## 'சிரித்திரன்சித்திரக்கொத்து'வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம் மே 14
''சுந்தர் இங்கிலாந்து போன்ற ஒரு நாட்டில் பிறந்திருந்தால் பெரும் கோடீஸ்வரராகவே இருந்திருப்பார். அவர் இங்கு பிறந்ததால் எமக்கு அதிஷ்டத்தையும் அவருக்கு துரதிஷ்டத்தையும், தந்துள்ளன.''

''சிரித்திரன் சித்திரக் கொத்து'' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சொண்டு பேசுகையில் பல்கலைக் கழக மருத்துவபீடப் பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி) மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'சிரித்திரன்' திரு சிவஞானசுந்தரத்தின், கேலிச்சித்தரங்களை (கார்ட்டூன்களை) கொண்ட சித்திரத்தின் சித்தரக் கொத்து' நூல் கடந்த வியாழக்கிழமை நல்லை ஆதீனத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

விழாவுக்கு திரு. பொன் பூலோக சிங்கம் தலைமை வகித்தார்.

டாக்டர் நந்தி அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:

திரு. சிவஞானசுந்தரம் வெளி நாட்டில் பிறந்திருந்தால் அவரது சித்திரங்களைக் கொண்ட நூலுக்கு இப்படி விழா வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. நூல் அச்சாகிக் கொண்டிருக்கும்போதே விற்பனையாகியிருக்கும்.

மேலை நாடுகளில் விளையாட்டு விரர்களும் பத்திரிகையாளர்களும் கேலிச்சித்திரக் காரர்களும் தான் கோடீஸ்வரர்கள். அங்கு அவர்களைப் பார்த்து டாக்டர்கள்பொறாமைப் படுவார்கள். நோயுள்ள ஒரு சமுதாயத்தில் தான் டாக்டர்கள், பெரியவர்கள். முன்னேறியுள்ள சமுகத்தில் அவர்கள் சிறியவர்கள்.

அங்கெல்லாம் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் இருக்கும் கார்ட்டூனிஸ்டுகளுக்கு அரசியல்வாதிகள் பயம். ஏன் ஏனைய சகலரும் அவர்களுக்கு பயமே. ஒரு கதையாசிரியனின் படைப்பை வைத்து கார்ட்டூன் கீறமுடியும். கார்ட்டூனை வைத்துக் கதை எழுத முடியாது.

வெளிநாடுகளில் ''கார்ட்டூன்'' புத்தகம் மாணவர்களுக்கு வேலைத்திட்டமாகக் கொடுக்கப்படுகிறதுஅதனால் அந்த நாடுகளின் வளங்கள் பெருகுகின்றன என்றார்,

பேராசிரியர் நா.சிவத்தம்பி விழாவில் பேசுகையில் கூறியதாவது:- எம்மை, எமது குறைகளை நாமே உணர்ந்து சிரிக்க வைக்கும் ஆற்றல் வாய்ந்தவை கேலிச்சித்திரங்கள் (கார்ட்டூன்கள்). அவை சிந்தித்துத் திருந்தவும் வைக்கின்றன. யாழ்ப்பாணத்தின் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய பண்பாட்டுச் சின்னமாக சிரித்திரன் சஞ்சிகை அமைந்துள்ளது என்றார்.

நல்லை ஆதின முதல்வர், அருட்தந்தை ஜெராட்சவரிமுத்து, யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் ஆகியோரின் ஆசியுரையும் கலாநிதி நா. சுப்பிரமணியன், செங்கை ஆழியான், திக்கவயல் சி. தர்மகுலசிங்கம், அகளங்கன் ஆகியோரின் கருத்துக்களும் இடம் பெற்றன.

கட்டைவேலி ப. நோ. கூ. சங்க உபதலைவர் எஸ். சதானந்தன் வெளியீட்டுரை நிகழ்த்தினார் முன்னாள் பல்கலைக்கழக விரிவுரையாளர் இ. முத்துத்தம்பி முதல் பிரதியை வாங்கினார்.

விழாவை மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார் (அ-3)

## ஆறாவது வருட நினைவஞ்சலி



### மிக்கேல்பிள்ளை அமலதாஸ்
(அமல்)

அன்னை மடியில்: 26 - 08 - 1959
ஆண்டவன் அடியில: 13 - 05 - 1984

தாய் மடியில் பிறந்த உயிர்
தாயகத்தில் மடிந்ததுவோ!
தேசத்தை ஆண்டவர்கள்
தேடியுன்னைக் கொன்றனரே!
தாயகத்தைப் படைக்கவந்த
தனயர்களில் மூத்தவன் நீ!
தாயென்ன தனயர்களும்,
தமிழீழ மக்களும் உன் மடிவை
தானறியின் கொதித்தெழுவர்;
தாயகமொன்றைத் தோற்றுவிப்பர்!

பிரிவால் துயருறும்
தாய், சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள், பெறாமகன்.

89, புதிய கடற்கரை வீதி,
குருநகர்.
[சி-5021]

# கல்வி, விளையாட்டுக்களைப்போல இசைக்கும் போதிய ஆதரவு தேவை

## சுன்னாகம் விழாவில் உதவி அரச அதிபர்

சுன்னாகம், மே 14
கல்வி, விளையாட்டு, கலாசாரத்துறைகளுக்கு ஊக்கம் தருவது போல இசைக்கும் ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

இசைத்துறைக்கு தரப்படும் ஆதரவு போதாது. தமிழர்களின் முக்கிய கலைகளில் ஒன்றான அதற்கு ஊக்கமளிக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம்.

ஷப்றா-உதயன் அனுசரணையுடன் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் குழுவினரால் மருதனாமடத்தில் நடத்தப்பட்ட மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியைத் தொடர்ந்து, சுன்னாகம் சந்தை மைதானத்தில் பரிசளிப்பு விழாவும், கலை விழாவும் நடைபெற்றன. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே உதவி அரசாங்க அதிபர் முன் சண்டவாறு தெரிவித்தார்.

விழாவுக்கு சுன்னாகம் கிராம சேவையாளர் திரு. சு. வேலும்மயிலும் தலைமை வகித்தார்.

விழாவில் ஷப்றா இயக்குநரும், உதயன் வெளியீட்டகத்தின் நிர்வாக இயக்குநருமான திரு. ஈ. சரவணபவனும், அவரது பாரியாரும் கௌரவ விருந்தினர்களாகத் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திரு. மகாலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-
எமது மொழி, பண்பாடு, கலாசாரம் வரலாறு எல்லாம் தனித்துவமானவை என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டவே இது போன்ற கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்து 42 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழர்களின் புத்தாண்டு தினக் கொண்டாட்டங்கள் உத்தியோகபூர்வமாக இவ்வருடம்தான் நடைபெற்றன. அந்தக் கொண்டாட்டங்களில் எமது பாரம்பரியம், வரலாறு கலாசாரத்தைப் பிரதிபலிக்கக்கூடியதாக பல அம்சங்கள் இடம்பெற்றிருந்தன.

கல்வி, விளையாட்டு கலாசாரதுறைகளுக்கு தரும் ஆதரவைப் போல சங்கீதத்துக்கும் இசைக்கும் நாம் ஆதரவு வழங்க வேண்டும். மேலை நாட்டவர்கள் நம் கர்நாடக இசைக்கு அதிக ஆதரவு தருகிறார்கள். நாம் அளிக்கும் ஆதரவு போதாது.

விளையாட்டு கல்வி, கலாசார வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஷப்றா நிறுவனம் வேண்டிய ஆதரவும் ஊக்கமும் அளித்து வருகிறது. அதே போல எமது பிரதேசத்தில் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்கும், ஏழை மக்களின் நலன்களைப் பேணுவதற்கும் ஷப்றா உதவ முன்வர வேண்டும் — எனக் கேட்டுக் கொள்கின்றேன் — என்றார்.

ஷப்றா நிறுவன யாழ். கிளையின் பொது முகாமையாளர் திரு. இ. ஸ்ரீரங்கநாதன் தமது சிறப்புரையில் கூறியதாவது:-

கல்வித்துறையிலும் விளையாட்டுத் துறையிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஷப்றா நிறுவனம் பல நிகழ்ச்சிகளையும், போட்டிகளையும் நடத்தி வருகிறது. இப்போது தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டும், கலையுமான மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிக்கு ஆதரவு தந்துள்ளோம். அதற்கு எமக்கு ஒரு வாய்ப்பைத் தந்த உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் குழுவினருக்கு எமது நன்றிகள்.

கல்வி, கலை, விளையாட்டு துறைகளில் இளைஞர்களுக்கு ஊக்கமளிக்க நாம் எப்போதும் முன்நிற்போம் என்றார்.

உதயன் வெளியீட்டகத்தின் பிரதம ஆசிரியர் திரு. ம. வ. கானமயில் நாதன் தமது சிறப்புரையில கூறியதாவது:-

தமிழர்களின் வாழ்க்கை இயற்கையோடு அமைந்திருந்தது. அந்த வகையில் சூரியனுக்கு அடுத்ததாக பசுவுக்கும், எருதுக்கும் முக்கிய இடம் கொடுக்கும் மரபு வளர்ந்தது.

சல்லிக்கட்டு, மாட்டுவண்டிச் சவாரி போன்றவை தமிழனுக்கு இளைமையிலிருந்தே உடலுறுதி, துணிச்சல்,வீரம் ஆகியவற்றை ஊட்டும் விளையாட்டுக்களாக அமைந்திருந்தன. அப்படிப் பார்த்தால் மாட்டுவண்டிச் சவாரி தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு. அது ஒரு கலையும் கூட.

மாட்டுவண்டிச் சவாரி போலவே கிளித்தட்டு,கிட்டி அடித்தல், தேர்ப்படுதல் ஆகிய பாரம்பரிய விளையாட்டுக்களும் [illegible] கப்பட்டு வருகின்றன.

கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் போல அவற்றையும் பாடசாலைகளில் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,


மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளை உல்லாசப் பிரயாணிகளைக் கவரக்கூடிய விளையாட்டாகவும் மாற்றலாம். அதற்கேற்ற வசதிகள் இங்கு இல்லை. வண்டிச்சவாரி நடத்தக்கூடிய திடல்கள் இல்லை. திடல்களை ஏற்படுத்தி இப் போட்டிகள் அழியாமல்பாதுகாக்கும்பொறுப்பு எதிர்காலத்தில் இங்கு அமையஇருக்கும் அரசுக்கு உண்டு. - என்றார்.

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு திருமதி யசோதை சரவணபவன் பரிசுகளை வழங்கினார்.

கலை நிகழ்ச்சியாக சுன்னாகம் சிவன் சிறுவர்பாடசாலை மாணவரின்'' அசையும் சிலைகள்'' நாடகமும்,சுண்டுக்குளி ராஜன்ஸ் இசைக் குழுவினரின் ''இதய கீதம்'' இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

ஆயிரக்கணக்கான மக்கள் விழாவுக்குச் சமுகமளித்திருந்தனர். (அ-90)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### மயில்வாகனம் ஸ்ரீகுமார்

ஆண்டவன் படைப்பு: 21 - 06 - 1964
அரக்கர் அழிப்பு: 14 - 05 - 1990

அன்று,
உன்மரணச் செய்தி கேட்டு
ஊமையராய் போனதுண்டு
காரணம் கேட்கத்தானும்
கடுகளவு துணிவும் இல்லை
காலமோ வருடம் ஒன்று
கடிதாகப் போனதையா!
காரணமோ கண்டு விட்டோம்
காவியமே உன் மரணத்திற்கு
மண்ணை நீ நேசித்தாய்
மரணமே தழுவிக் கொண்டாய்!
இருபத்தியிரு வயது
இளமனைவி தன்னுடனே
பாலகரோ இருவரையா
படுந்துயரம் சொல்லப்போமோ!
எம்மிடமோ வார்த்தையில்லை
எழுத்திலே வடிப்பதற்கு
ஆதரவு யாருமற்று
அநாதையாய் உன் எண்ணந்தாங்கி
நடைபிணமாய் உலவுகின்றாள்
நாயகனே! நீ அமைதி காண்பாய்.

மனைவி — சாந்தி,
பிள்ளைகள் — துர்சிகா, துதர்சன்.

பலாலிவடக்கு,
வசாவிளான்.
[3554]

## யாழ். மாநகர--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் உள்ள 10 மாநகர சபைகளுக்கு உதவவேண்டியுள்ளது. இம்முறை வழங்கப்படும் 20 கோடி ரூபாவில் குழந்தைகள், தாய்மார் முன்னேற்றத்துக்கு உதவ வேண்டும் - என்றார். யுனிசெப் [illegible] ஜனாப் ஹூசெய்னும் கலந்து கொண்டு உரையாற்றினார். (இ-3)

## தமிழ்,முஸ்லிம்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியும். கடந்த காலங்களில் ஏயாற்றுக்காரர் நடத்திய அரசியல் வியாபாரம்-தொழிற்சங்க வியாபாரங்களால் மக்களும் தொழிலாளர்களும் பல கூறுகளாகப் பிளவுபட்டு எமது உரிமைப் போராட்டம் பலவீனமடைந்திருந்தது.

இன்று இந்த நிலைமாறி மக்களும், தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து ஒரே குரலாக ஒலிக்கின்ற. செயற்படுகின்ற பிரகாசமான சூழ்நிலை தோன்றியுள்ளது.

இந்த நல்ல சூழ்நிலையைக் கெடுப்பதற்கு இதுவரையும் தமிழ், முஸ்லீம் தொழிலாளர்களைப் பிரித்து வைத்திருந்த தென்னிலங்கைத் தலைமையைக் கொண்ட தொழிற்சங்க ''வியாபாரி''கள் முயற்சி செய்து வருகிறார்கள். இந்நோக்கத்திற்காக எம்மீது பொய்யான குற்றச் சாட்டுகளையும் அவர்கள் சுமத்தி வருகிறார்கள்.

இது குறித்து தமிழ், முஸ்லீம தொழிலாளர்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு தொழிற் கூட்டங்களிலும் அமையப் போகின்ற தொழிற்சங்க நிர்வாகம் நேர்மை, நாட்டுப் பற்று, வர்க்க உணவு, [illegible] ஆகிய அம்சங்களைக் கொண்டவர்களைக்கொண்டு அமைக்கப்பட வேண்டும்-என்றார். (ஒ)

## அரசு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி: வடக்கு - கிழக்கில் உங்கள் இயக்கத்தினர் இன்று நிலைகொண்டுள்ளனரா?

பதில்: நான் அதிகமாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. எமது போராளிகள் அங்கு உள்ளனர். விடுதலைப் புலிகளுக்குத் தெரியாமல் அவர்கள் அங்கு நடமாடுகிறார்கள். சிலர் காடுகளில் உள்ளனர். ஈ. பி. ஆர். எல். எவ் தரப்பினர் எல்லா இடங்களிலும் உள்ளனர்.

ஆனால் அவர்கள் தற்போதுள்ள அமைதியைக் குலைக்க மாட்டார்கள். அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்களையும் அவர்கள் குழப்பமாட்டார்கள். நிலைமையை அவர்கள் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

சரியான நேரத்தில் வெளியே வருவார்கள்.

எமது தரப்பினர் குமணக் காடுகளிலும் காத்து இருக்கின்றனர். விடுதலைப் புலிகளுடனும் இராணுவத்துடனும் மோதுவது கஷ்டமானது.

கேள்வி: உங்களுடைய உறுப்பினர்களின் நிலை, இந்தியாவில் உள்ள அகதிகள் நிலை பற்றிக் கூற முடியுமா?

பதில்: ஒரிஸாவில் அகதிகளாக உள்ள 800 பேரில் அரைவாசிப் பேர் ஒரிஸா அகதி முகாம் அதிகாரிகளின் அனுமதியுடன் சென்னை சென்று விட்டனர். ஒரிஸ்ஸாவில் இப்போது அதிக வெப்பம் நிலவுகிறது. இக்காலை நிலை காரணமாக ஓர் அகதி அங்கு இறந்துவிட்டார்.

எஞ்சியோரும் ஒரிஸாவை விட்டு வெளியேறி விடுவர்.

தமிழ் நாட்டுச் சிறையில் 100 அகதிகள் வரையில் அகப்? பட்டுள்ளனர். இது சம்பந்தமாக மனித உரிமை மீறல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எமது உறுப்பினர்கள் எவரும் தமிழகத்தில் ஆயுதங்களுடன் திரிவதில்லை

கேள்வி: வடக்கு- கிழக்கில் உங்களால் சட்டத்தை நிலைநாட்ட முடியவில்லை. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வடக்கு - கிழக்கு உள்ளது. இந்த முட்டுக்கட்டை நீடிக்கிறது. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்

பதில்: சந்தர்ப்பத்தைஎதிர்பார்த்து நாம் காத்து இருக்கிறோம். இப்போது நடப்பது பிழை என்பதை அரசு உணரவேண்டும். நாம் குழப்பம் எதையும் ஏற்படுத்தவில்லை. நாம் குழப்பினால், அமைதியைக் குழப்பியதாக எம் மீது குற்றஞ்சாட்டுவர்.

கேள்வி:- ஆனால் வன்செயல் இல்லையே!

பதில்:- ஏனைய குழுக்கள் இருந்தால் வன்செயல் இருக்கும். நாம் குழப்ப வேண்டும் என்று நினைத்தால் அது இரண்டு நிமிட வேலைதான். நாம் யாழ்ப்பாணம் சந்தியில் ஒரு கிரனேட்டை எறிந்தால் உடனே பிரச்சினை தொடங்கிவிடும். உடனே மக்கள் அமைதியில்லை என்று முறையிடுவார்கள். (அ-எ)

## 6 வது---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் வருமாறு:-

★ தமிழ்பேசும் மக்களின் மிகப் பிரதானமான அடிப்படை உரிமையை நசுக்கும் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கும்வரை தமிழீழ விடுதலைப் புலிகள் தேர்தலில் பங்குபற்றப்போவதில்லை இந்தச்சரத்தை வைத்திருப்பதால் தென்னிலங்கையிது அவர்கள் எதையும் சாதித்தல் விடவும்போவதில்லை.

★ எங்களுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போது நாங்கள் முன் வைத்த பலவற்றை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. கிழக்கில் இராணுவ முகாம்களை நீக்குதல் போன்றவற்றை அரசு ஏற்று புல்லுமலை, கரடியனாறு, பாலம்போட்டாறு முகாம்களை அகற்றியுள்ளது.

★ திருகோணமலையே தலைநகரம் என்பதில் எவ்வித கருத்துவேறுபாடும் இல்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் திருமலலையையே தலைநகரமாகக் கொண்டு செயல்படுவோம்,

★ வடகிழக்கில் புனர்வாழ்வு வேலைகள் தடங்கலின்றி நடைபெறவேண்டும். இதுசம்பந்தமாக அரசுடன் பேசியுள்ளோம். உலகநாடுகள் வடக்குக் கிழக்குக்கென வழங்கியநிதி எமது பகுதிக்கே செலவிடப்படவேண்டும். நாம் ஆட்சிக்கு வந்ததும்இந்த விடயத்தில் மிகக் கவனமாக இருப்போம்.

இக்கலந்துரையாடலின் போது மாவட்டப் பொறுப்பாளர் பதுமனும் கூட இருந்தார். (அ-155)

## இந்தியப்---

கொள்கைகளுக்கு தமிழர்கள் பலியாகினர்.

இனவாத அடிப்படையில் தமிழ் தலைமைத்துவம் சென்றுகொண்டிருந்ததையும் முன்னணி கண்டிக்கிறது.


### The Jaffna Education Center
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்)
G. C. E (O/L), A/L Commerce, Arts and Science
Spoken English
Short-hand, Typing இருமொழிகளிலும்
I. A. B
A. A. T. ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள் 14 - 05 - 1990 இல் ஆரம்பமாகின்றன.
★ பெண்களுக்கு விடுதிவசதியும் உண்டு
[3560]


## 6ஆம் மாத அந்தியேட்டி அழைப்பிதழ்



### செல்வன் நடராசா மோகன்

தேசத்தின் ஜனனம் 19 - 02 - 1960
தேசத்துரோகிகளால் மரணம் 13 - 12 - 1989

உங்கள் உடன் பிறவாத அன்பு தம்பிக்காக
உயிரைத் தியாகம் செய்த மோகன்
தேசத் துரோகிகளால் அழிக்கப்பட்டார்
மோகன் மீண்டும் வருவான்!
யாகம் சண்டு மகிழ்வான்!
தமிழீழ நாட்டினைக் காண்பான்!
தமிழோடு உயிராக உறவாடுவான்!

உனது நினைவால் வாடும்:
அன்பு அப்பா, அம்மா, அக்கா தம்பி,
தங்கைபரும் மற்றும் இரத்தத்தின் இரத்தங்களும்.


V. S. நடராசா
வேளாதோப்பு,
கல்வியன்காடு.
(13077)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்

14 - 05 - 1990 திங்கட்கிழமை




# வசதி அற்றோர் கல்வி பெற

# சகலரும் உதவ வேண்டும்

## படித்த இளைஞர் தின வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், மே 14

''படித்த இளைஞர்கள் பிரச்சினைகளை வெளிக் கொண்டுவர அனுஷ்டிக்கப் படும் இந்தத் தினத்தில் வசதி அற்ற நிலையில் கல்வி கற்க முடியாது இன்னல்படும் முதியோர்கள், இளைஞர்கள் பற்றி சிந்திக்க வேண்டும். அவர்களுக்கு கல்வி வாய்ப்பை ஏற்படுத்த சகலரும் முன்வர வேண்டும்''.

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். நகரப் பொறுப்பாளர் திரு. பொன் மாஸ்டர்.

முத்துக்குமாரு கோபால கிருஷ்ணனின் முதலாவது ஞாபக தினத்தையொட்டி நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற 'படித்த இளைஞர் தின' வைபவத்தில் கலந்து பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. நா. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தியாகிகளுக்காக நாம் விழாக் கொண்டாடுவதுடன் நிற்காது, அவர்கள் அடைய விரும்பிய இலட்சியத்தை அடைய நாம் போராட வேண்டியது அவசியம்.

இந்த இலட்சியப் போராட்டத்தில் சகலரையும் பங்காளிகளாக்கவே இன்று முன்னணியை உருவாக்கியுள்ளோம். இம் முன்னணியில் இணைந்து தமது பங்களிப்பை சகலரும் வழங்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

நாடக நடிகரும், சென்ரலைட் விளையாட்டுக் கழகத்தின் உப - தலைவருமான திரு. கே. எஸ். பாலச்சந்திரன் பேசுகையில் கூறியதாவது:-

இன்று எம் மக்களிடையே பொருள், பணம் ஆகியவற்றில் நாட்டம் ஏற்பட்டுள்ளது. அன்பு, உறவு, கல்வி ஆகியவற்றில் நாட்டம் இல்லை. பணத்தால் முன்னேற நினைக்கிறார்கள். இதன் காரணமாக கல்வியை அரைகுறையில் விட்டு வெளிநாடு செல்கிறார்கள். அங்கு சிறு வேலை செய்து பணம் சேர்க்கிறார்கள். பின்பு இங்கு திரும்பி கல்வி அறிவு போதாத நிலையில் அவர்களால் என்ன செய்யமுடியும். இதையிட்டு இளம் சந்ததியினர் சிந்திக்கவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இ. பரராஜசிங்கம் பேசுகையில்:-

பாடசாலைகளில் படிப்பது மட்டும் கல்வி அல்ல. சமுதாய மாற்றங்கள் ஏற்றத் தாழ்வுகள் ஆகியன பற்றியும் அறிய வேண்டும். தமிழ் மக்களிடம் வேறுபாடு இல்லாது ஒரே இலட்சியத்தின் கீழ் செயல்பட சகலரும் முன்வந்து ஒத்துழைக்க வேண்டும் -என்றார்.

திரு. க. செ. சி. முத்துக்குமாரு வரவேற்புரை நிகழ்த்தினார்.

காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன நிர்வாக முகாமையாளர் திரு. வை. த. சிவலிங்கம், திரு. எஸ். இராமகிருஷ்ணன், செல்வி ஜெ. இராஜமஞ்சரி உட்பட பலர் உரையாற்றினார்கள்.

விசேஷ கடித உறை இரத்துச் செய்யும் வைபவம் இடம் பெறவில்லை. (இ-3)

## அரச அதிபர் தென்மராட்சி விஜயம்

யாழ்ப்பாணம், மே 14

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் மக்கள் குறைகள் ஆகியவற்றை நேரடியாக கேட்டறிய இன்று திங்கட்கிழமை சாவகச்சேரிக்கு யாழ். அரச அதிபர் திரு அன்ரன் அல்பிரட் விஜயம் செய்கிறார்.

காலையில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பொது அமைப்புகளிடம் மக்களின் குறைகள் குறித்து அவர் கேட்டறிவார்.

அதன் பின் கொடிகாமம் நடமாடும் செயலகத்துக்கு அவர் விஜயம் செய்வார்.

அங்கு அபிவிருத்தி திட்டங்களையும் அவர் பார்வையிடுவார்.

அவருடன் செயலக பொறியியலாளர் திரு. திசநாயகமும் செல்கிறார். (இ-3)

## மன்னார் வாசி மரணம்

யாழ்ப்பாணம் மே 14

தாக்குதல் ஒன்றில் காயம் அடைந்த ஒருவர் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு மரணமானார்.

மரணமானவர் [illegible] கான் வயது 27 பொற்கேணியைச் சேர்ந்தவர். (இ-3)

## உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 10 இல் ஆரம்பம்

கொழும்பு, மே 14

ஜீ. சீ. ஈ உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து இருபது தினங்கள் பரீட்சை நடைபெறும்.

இன்றுடன் (மே 14) இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதி முடிவடைகின்றது.

என்றாலும், சொற்ப விண்ணப்பங்களே தனியாரிடமிருந்தும் பாடசாலைகளில் இருந்தும் பரீட்சைத் திணைக்களத்திற்கு இதுவரை கிடைத்துள்ளன.

பெரும்பாலான பாடசாலைகள் விண்ணப்பப்பத்திரங்களை இன்னமும் அனுப்பவில்லை என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


எமது நேற்றைய புதிய வெளியீடு

விஜயகாந் - அமலா - சந்திரசேகரின்

★ புதுப்பாடகன் ★

வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(13090)

எமது நேற்றைய வெளியீடு

புரட்சிக் கலைஞன் விஜயகாந், அமலா நடித்த

★ புதுப்பாடகன் ★

எமது அடுத்த வெளியீடு

முரளி, சித்தாரா நடித்த

★ புதுவசந்தம் ★

சுப்பஸோ வீடியோ ஓடியோ சென்ரர்,
யாழ் வீதி, யாழ்ப்பாணம். (13088)


## மரண அறிவித்தல்கள்

### சின்னையா பொனிப்பாஸ்

(மயிலிட்டி)
(முன்னாள் பொது முகாமையாளர். இலங்கை மின்சாரசபை)

மயிலிட்டியைச் சேர்ந்த திரு. சின்னையா பொனிப்பாஸ் 09-05-90 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் ஈவாவின் அன்புக் கணவரும், நிர்மலா, நிறாஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோன் (லண்டன்) இன் மாமனாரும், பிலோமினா, திரூசியஸ்(நைஜீரியா), கில்பேட், எடல்நீறா, யோசேப்பின் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் நல்லடக்கம் 14-05-90 இன்று திங்கட்கிழமை பி. ப. 3-30 மணியளவில் மயிலிட்டி புனித காணிக்கைமாதா சேமக்காலையில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சி. சிவபாதம் (ஜோச்)
(மருமகன்)

6 ஆம் வட்டாரம்,
மயிலிட்டி.

(3561)

கந்தர்மடம்

### திரு. A. R. சண்முகலிங்கம்

(கெங்கநாதன்)

(யாழ். புகையிரத நிலைய அதிபர்)

கந்தர்மடம் திரு. A. R. சண்முகலிங்கம் (கெங்கநாதன்) காலமானார்.

அன்னார் தர்மரஞ்சிதம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சயந்தனின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அம்பலவாணர் இராசலிங்கம், அன்னபூரணம் தம்பதியினரின் புதல்வரும், காலஞ்சென்ற A. R சுப்பிரமணியம் (கொட்டாஞ் சேனை முன்னாள் அதிபர்) திரு. A. R. நடராசா (யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க முன்னைநாள் ஊழியர்) காலஞ்சென்ற சொர்ணம்மா வைத்தியலிங்கம், திருமதி ஞானம்மா தாமோதரம்பிள்ளை, திருமதி குணபூபதி குலராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற ஸ்ரீ சந்திரபாலன், திருமதி மனோகராணி இரத்தினசிங்கம், திருமதி செல்வராணி பரராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற திரு. சினித்தம்பி, திருமதி சினித்தம்பி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

திருமதி நாகபூஷணி, காலஞ் சென்ற வைத்திலிங்கம், திரு. தாமோதரம்பிள்ளை, திரு குலராஜன், திரு. இரத்தினசிங்கம், திரு பரராஜசிங்கம், திருமதி விஜயலக்சுமி ஆகியோரின் மைத்துனரும், திருமதி சுசேஜினி ஞானசுந்தரராஜன், திருமதி பிரியதர்ஷினி பிரேமச்சந்திரன், மிருநாளினி, நில்மினி. கார்த்திகாயினி, திருமாலினி, ராஜ்மன்னா ஆகியோரின் அருமைச் சித்தப்பாவும், திருமதி கருணாகரி. சுவாமிநாதன், திரு. கருணாகரன், கருணாநிதி சிவராஜ், சஞ்ஜீவராஜ், திருமதி தயாரதி, தட்சணாமூர்த்தி, தயானந்தராஜ், வாசுகி, துஷ்யந்தி, திரிவேணி, சரவணா செந்தூரன், பவித்திரா, பவானியின் அன்பு மாமனாரும், ரம்யா, யேனுகா, ராகவன் ஆகியோரின் பெரியப்பாவும் அர்ச்சுனா, பிரியங்கா, ஷர்மிளா, ஆர்த்தி ஹம்சத்துவனி ஆகியோரின் அன்புப் பாட்டாவும் ஆவார்,

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக 14-05-1990 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
A. R. நடராசா

56, பலாலி றோட்,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்.

[13080]

### திரு. செல்லத்துரை வரதலிங்கம்

திரு செல்லத்துரை வரதலிங்கம் அவர்கள் 12-5 1990 அகால மரணமாகி விட்டார். இவர் வேலணை மேற்கு சைவப்பிரகாசவித்தியாலய இளைப்பாறிய அதிபரும், யாழ். நல்லூர் சாரணர் ஆணையாளரும், யாழ். செஞ்சிலுவைச் சங்க தீவுப்பகுதிப் பிரதிநிதியும், தீவுப்பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கச் செயலாளரும் ஆவார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலம் சென்ற செல்லத்துரை தம்பதியினரின் மகனும், காலம் சென்ற சபாரெத்தினம் தம்பதியினரின் மருகரும், ஜெயந்தி, (கனடா) ஜெயக்குமார் [லண்டன்], ஜெயபவி [யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவி], ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரன் [கனடா] அவர்களின் மாமனாரும், பிரியங்காவின் அன்புப் பேரனும், கனகாம்பிகை, தவமணிதேவி ஆகியோரின் சகோதரனும், பாக்கியலெட்சுமி, கமலாம்பிகை (ஆசிரியை வவுனியா], அருணாசலம், கனகராசா [C. W. E] அவர்களின் மைத்துனரும், வல்லிபுரநாதன், யோகநாதன் (Post Master, வவுனியா], அவர்களின் சகலனும், ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 14-05-1990 திங்கட்கிழமை மாலை 3. 30 மணிக்கு அவரது புளியங்கூடல் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

தகவல்:
வி. வல்லிபுரநாதன்

புளியங்கூடல்.
ஊர்காவற்றுறை.

[13083]

## மரண அறிவித்தல்கள்

### குணரத்தினம் யோகீஸ்வரன்

குணரத்தினம் யோகீஸ்வரன் (யாழ். நீர்வழங்கல் வடிகாலமைப்பு மேற்பார்வையாளர்) காலமானார். இவர் முன்னாள் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. குணரத்தினம், திருமதி குணரத்தினம் (சொர்ணம்மா) தம்பதியரின் அன்பு மகனும், பவானியின் அன்புக் கணவரும் ஓங்காரகுமரன், சுகந்தன், கோகுலன், நிருத்தன், அபிராமி [இராமநாதன் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணநாதன் (யாழ். மக்கள்வங்கி பிரதானவீதி), சிறீதரன், காலஞ்சென்ற யோகீஸ்வரி, சோதிராணி ஆகியோரின் உடன்பிறப்பும், வேலாயுதபிள்ளை, வைத்திலிங்கம், உமாபதி, சண்முகலிங்கம், (யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்), கனகசபாபதி (கணக்காளர் திறைசேரி), சியாமிளா ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை பிற்பகல் ஏழாலை மேற்கில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்
நா. வேலுப்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

(13086)

### திரு. V. M. சண்முகம்

V. M. சண்முகம் & பிறதர் (V. M. S Transport) 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்; 74, பழைய சோனகத் தெரு, கொழும்பு உரிமையாளர் V. M. சண்முகம் அவர்கள் 13-05 1990 ஞாயிறு காலை காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்

[illegible]
காரைநகர்.

[3562]

## மரண அறிவித்தல்கள்

### திரு. ஞானமுத்து பிரான்சிஸ்

விடத்தல்தீவு மாந்தை மேற்கு பல நோ. கூ. சங்க தற்காலிக கிளை மேற்பார்வையாளர் திரு ஞானமுத்து பிரான்சிஸ் காலமானார்.

அன்னார் சாமிநாதர் ஞானமுத்து - அமிர்தம் தம்பதிகளின் அன்பு மகனும், விடத்தல்தீவைச் சேர்ந்த ஞானமுத்து மேரிராணி அவர்களின் கணவரும், மாட்டீன், தேவராசா, இருதயநாதன் (டுபாய்), பெனடிற் ஜெபரட்ணம் (கிராம சேவை அலுவலகர்), மேரிராசா, மலர், தேவராணி, ஆனற்ரோலியா ஆகியோரின் அன்பு சகோதரரும், ஜெபராசா, செல்வராணி, செலின் அம்மா, சாந்தநாயகி, காலம்சென்ற எட்வின் கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும், ஜெனிசா, றுபிண்டா, அஞ்சலா, அருள்மதி, அஜந்தா, ஜக்சன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மல்வத்தை உடுவில் தாயாரின் இல்லத்தில் நடைபெற்று. 14-05-1990 திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு மல்வம் திருக்குடும்பம் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மல்வத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெனடிற் ஜெபரட்ணம்

உடுவில். [13084]

### Rev. அருள்திரு. B. C. D. மேதர்

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தெஹிவளையை வசிப்பிடமாகக் கொண்டவருமான அருள்திரு. B. C. D. மேதர் அவர்கள் 13-05-1990 ஞாயிற்றுக்கிழமை மறுமையெய்திவிட்டார்.

அவர் நவமணியின் அன்புக் கணவரும், மனோ, ரஞ்சன், பத்மினி, ரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தெல்மா, சரோஜினி, காலம்சென்ற ராஜன் ஆனல்ட், ஜோன் வூட் ஹெளஸ் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரது அடக்க ஆராதனை விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனோ மேதர்
(மகன்)

லோட்டன் வீதி,
மானிப்பாய்.

[13087]

### ஆறுமுகம் வேலுப்பிள்ளை

மாதகலைப் பிறப்பிடமாகவும், கல்வளை சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலுப்பிள்ளை 12-05-1990 இல் காலமானார்.

இவர் காலம்சென்ற மாதகல் ஆறுமுகம் சிதம்பரம் தம்பதிகளின் புதல்வரும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுவாமிநாதன் கனகம்மா தம்பதிகளின் மருமகனும், சிவபாதம் [மட்டக்களப்பு], ஜெயந்தி [கனடா], வசந்தி [கனடா], சுரேஷன் [U.K], குசேலன் [மேற்கு ஜேர்மனி], காலஞ்சென்ற வாகீசன் [அம்மா], சுகந்தி [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும். பரமநாதன் [கனடா], நிலார் [கனடா], பாலமுரளி [கனடா], சதானந்தன் [U.S.A], விவேகானந்தன் [நெல் சந்தைப்படுத்தும் சபை, மன்னார்], வடிவாம்பிகை [மாதகல்], காலஞ்சென்ற ஐயாத்துரை குமாரசுவாமி [கல்வளை, சண்டிலிப்பாய்] ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சிதம்பரம், இராசம்மா ஆகியோரினதும், பாக்கியத்தினதும் அன்புச் சகோதரரும், இராமகிருஷ்ணன் சரஸ்வதி [ஆசிரியை], முத்துக்குமாரு [மாதகல்] ஆகியோரின் மைத்துனரும், இராமகிருஷ்ணனின் [முகாமையாளர், இலங்கை வங்கி, கொழும்பு] சகலனும், சந்திரிக்கா [ஹற்றன் நாஷனல் வங்கி. கொழும்பு], கீதா ஆகியோரின் பெரிய தந்தையும், யோகன், பிரஷாந். றோஷான், நிஷான் ஆகியோரின் பேரனும், விநோதன் [சட்டத்தரணி], ஜயந்தி [சட்டத்தரணி], உத்தமி ஆகியோரின் ஐயாப்புவுமாவார்.

ஈமக்கிரியைகள் 15-05-1990 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. வினோதன்

கல்வளை,
சண்டிலிப்பாய்.

[13085]

### நா. சிவசோதிநாதன்

நா. சிவசோதிநாதன் (ப. நோ. கூ. சங்கம் சுன்னாகம்) 13-5-90இல் காலமாகிவிட்டார். அன்னார் காலம்சென்ற க. நாகலிங்கம் [ஸ்தாபகரும் - முன்னைய அதிபர் நாகேஸ்வரி வித்தியாலயம் - சுன்னாகம்], நா. கண்மணி அவர்களின் ஏகபுத்திரனும், செல்வமணியின் அன்புக் கணவரும், சாந்தகுமாரி, சூரியகுமாரி, ரகுநாதன், ஜெயக்குமாரி, செல்வகுமாரி, விஜயகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வநாதன், இராமநாதன், இந்திராதேவி, சபாநாதன், யோகநாதன், ஜெகநாதன், வனிதாமணி, இரவீந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகராசா, சாந்திநாதர், சரோஜாதேவி, கமலாசினி, சாந்தகுமாரி, ஞானதேவி ஆகியோரின் மைத்துனரும், வி. சிவசுப்பிரமணியம் (முன்னைய அதிபர்-ஸ்கந்தா) அவர்களின் பெறாமகனுமாவார். அன்னாரின் பூதவுடல் 14-5-90 (திங்கட்கிழமை) 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து இறுதிக்கிரியைக்காக கொத்தியாலடி [சுன்னாகம்] மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அறிவிப்பாளர்
நா. சபாநாதன்

நாகேஸ்வரிவித்தியாசாலை வீதி,
சுன்னாகம்.

(13089)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org